யாழ். மாநகரசபை ஊழியர் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம்

(பதிவு இல. ஜெ. 1079 - 03 - 04 - 1951)

**I. M. C. Staff Co-operative Credit and Thrift Society Limited.**

# பொன் விழா மலர்

## – 2001 –

50

1951 - 2001




**மாநகரசபை அலுவலகம், யாழ்ப்பாணம்.**

**MUNICIPAL OFFICE, JAFFNA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிங்கன் கிறீம் ஹவுஸ்

119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

**லிங்கன்**
**என்றால் நினைவிற்கு வருவது**

# ஐஸ்கிறீம்

***சுவைத்துப் பாருங்கள்***

***சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட***

- ஸ்பெசல் ஐஸ்கிறீம்
- சொக்லேட் ஐஸ்கிறீம்
- நட்ஸ் ஐஸ்கிறீம்
- புருட்சலட் ஐஸ்கிறீம்
- ஜெலி ஐஸ்கிறீம்
- வெனிலா ஐஸ்கிறீம்
- மட்டன் றோல்
- பட்டர் கேக் வகைகள்
- மிக்ஸர் வகைகள்
- லட்டு வகைகள்
- மஸ்கட் வகைககள்





**அங்கர் பட்டர்**

**ஸ்பெவுல் பீடா**

***அத்தனையும் ஒரே இடத்தில்***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாநகரசபை ஊழியர் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம்

# பொன் விழா மலர்

**50**

**1951**

## J. M. C. Staff Co.operative Credit and Thrift SocietyLimited.

# GOLDEN JUBILEE MAGAZINE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் விழா ஆண்டு செயற்குழுவினர்

| | |
|---|---|
| தலைவர் | திரு.இ.க.இராஜேஸ்வரன் B.A., H.N.dip. in Acc.<br>கணக்காளர்<br>உயர்தர தொழில் நுட்ப நிறுவனம், யாழ்ப்பாணம்<br>(உயர் கல்வி தகவல் தொழில் நுட்ப அமைச்சு) |
| உப தலைவர் | திரு.செ.மார்லின் பெர்னான்டோ<br>திட்டமிடல் பிரிவு, யா.மா.ந.சபை |
| செயலாளர் | திரு மு.சிவசண்முகராஜா<br>சித்தமருத்துவப் பகுதி, யா.மா.ந.சபை |
| உப செயலாளர் | திரு.மா.நிக்சன்<br>பொது சுகாதார பொறியியல் பிரிவு, யா.மா.ந.சபை |
| பொருளாளர் | திருமதி ஆனந்தி குலசேகரம்<br>காசாளர் யா.மா.ந.சபை |

உறுப்பினர்கள்:-

1. திரு.ப.ரவீந்திரதாசன்
   வேலைப்பகுதி, யா.மா.ந.சபை
2. திரு க.மோகனரூபன்
   சுகாதாரப் பகுதி, யா.மா.ந.சபை
3. திரு நா. கிருஷ்ணபிள்ளை
   வேலைப்பகுதி, யா.மா.ந.சபை
4. திரு எஸ். விஜயரட்ணம்
   எழுதுநர், வேலைப்பகுதி
5. திரு. எஸ் தேவதாஸ்
   பொ.சு.பொறியியல் பிரிவு
6. திரு எஸ். சிவராசா
   வேலைப்பகுதி, யா.மா.ந.சபை
7. திரு மா.நவரெத்தினம்
   வாகனப்பகுதி யா.மா.ந.சபை
8. திரு. எம். எட்வின்
   பொ.சு.பொ.பகுதி யா.மா.ந.சபை
9. திரு.அ.யோணேஸ்
   பொ.சு.பொ.பகுதி, யா.மா.ந.சபை
10. திருமதி சு.நாகலோஜினி
    சுகாதாரப் பகுதி, யா.மா.ந.சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே ...


| | | பக்கம் |
|---|---|---|
| ♦ ஆசியுரைகள் | | |
| தலைவரின் இதயத்திலிருந்து... | திரு. இ. க. இராஜேஸ்வரன் | 1 |
| ♦ பொருளாளரின் எண்ணத்தில் .... | திருமதி ஆனந்தி குலசேகரம் | 5 |
| ♦ சிக்கனச் சங்கத்தின் வளர்ச்சிப் பாதையிலே ..... | திரு. இரா இரத்தினசிங்கம் | 6 |
| ♦ நெஞ்சம் மறக்குமா .... | திரு. மு. சிவசண்முகராசா, | 11 |
| ♦ வளர்ச்சிப் பாதையில் ..... | திரு. கா. மோகனரூபன் | 13 |
| ♦ வரையறுத்த யாழ் மாநகரசபை ஊழியர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கமும் அங்கத்தவர்களின் நலன்களும் | திரு. இ. ரட்ணம் | 15 |
| ♦ தலைமைத்துவம் | திரு. க. தேவராஜா | 20 |
| ♦ தொடர்பாடல் | செல்வி. சு. சுஜித்தா | 30 |
| ♦ யாழ்/ மாநகரசபை ஊழியர் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம் காணும் பொன்விழா - ஒரு வாழ்த்து | திரு. நா. செல்லத்துரை | 57 |
| ♦ நன்றியுரை | திரு. மு. சிவசண்முகராசா | 59 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் மாநகரசபை மன்ற உறுப்பினர்கள்



யாழ் மாநகரசபை ஊழியர் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்க செயட்குழுவினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர்: ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்

ஆதீன முதல்வர்: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

தொலைபேசி: 2870

நல்லூர், யாழ்ப்பாணம்,
இலங்கை.

## குருபாதம்

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன
இரண்டாவது குருமஹா சந்நிதானம் அவர்களின்

# அருளாசிச் செய்தி.

அன்பு நெஞ்சத்தீர்;

யாழ். மாநகரசபை ஊழியர் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம் ஐம்பதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதையிட்டு மனமகிழ்ச்சியடைகின்றோம். யாழ்ப்பாண மக்களின் தேவைகளை பல வழிகளிலும் நிறைவு செய்யும் மாநகரசபையில் கடமையாற்றும் ஊழியர்களின் நலன்கருதி அவர்களின் வாழ்வு வளம்படுத்த கடனடிப்படையில் உதவி வழங்கி ஊக்கிவிப்பது வரவேற்பதற்குரியதாகும். இங்கு கடமை புரியும் ஊழியர்கள் ஒவ்வொருவரும் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டை மனதிற் கொண்டு மக்களின் சேவையே மகேசன் தொண்டு என்று பணியாற்றுவது போற்றுவதற்குரியது. காலத்தின் தேவையறிந்த ஊழியர் ஒவ்வொருவரும் எடுத்த கடமையை செவ்வனே ஆற்றுவதன் மூலமாக இறைவனின் ஆசிக்குப் பாத்திரமாவீர்கள். சிக்கன கடனுதவிக் கூட்டுத்தாபனத்தின் உதவிகளை நல்ல முறையில் பயன்படுத்தி வாழ்வீர்களாக. ஐம்பது வருடங்கள் ஊழியர்களின் நலன் கருதி பணியாற்றிய யாழ் மாநகரசபை ஊழியர் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம் இன்னும் பல ஆண்டுகள் பணியாற்ற இறைவனை வேண்டி இதற்காக சேவையாற்றிக் கொண்டிருக்கும் அன்பு நெஞ்சங்களை இறைவன் ஆசீர்வதிப்பானாக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ST. MARY'S CATHEDRAL**
**JAFFNA SRI LANKA**

**பங்குத் தந்தை அவர்கள் வழங்கிய**

# ஆசிச் செய்தி.

"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்ற கூற்றுக்கமைய யாழ் மாநகரசபை ஊழியர் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம் கடந்த 50 வருடங்களாக மாநகரசபை ஊழியர்கள் கூட்டுறவுச் சங்கமாக கூடி வாழ்ந்து கோடி நன்மை பெறச் செய்துள்ளது. இவ் கூட்டுறவுச் சங்கத்தில் எமது கிறீஸ்தவ சமயத்தை சார்ந்த பல நூறு ஊழியர்கள் அங்கத்தவர்களாக இருந்து அளப்பரிய நன்மைகளைப் பெற்று வாழ்க்கையில் முன்னேற்றம் கண்டுள்ளார்கள். இக் கூட்டுறவுச் சங்கம் பொன்விழாவை 2001 ஆம் ஆண்டு கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன், வாழ்த்துகின்றேன். பொன்விழா கொண்டாடும் இக்கூட்டுறவுச் சங்கத்தின் முன்மாதிரியைக் கண்டு மற்றய கூட்டுறவு சங்கங்கள் உருவாகி மக்களிடையே ஒருவருக்கொருவர் உதவி செய்யும் மனப்பக்குவம் வளரவும் இப் பொன்விழா மலரும் கொண்டாட்டமும் உதவி புரியும் என்ற நம்பிக்கையுண்டு. யாழ் மாநகரசபை சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம் மென்மேலும் வளர்ச்சியடைந்து பலநூறு ஆண்டுகள் மாநகரசபை ஊழியருக்கு சேவை செய்ய வேண்டுமென்று வாழ்த்தி ஆசிகூறி நிற்கின்றேன்.

**அ. கொ. கிறிஸ்ரோப்பர்**
**பங்குத்தந்தை**
**புனித மரியன்னை பேராலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராஜா இரவிராஜ் නඩරාජා රවිරාජ් Nadarajah Raviraj

மாநகர முதல்வர்
யாழ்ப்பாண மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

නගරාධිපති
මහා නගර සභාව
යාපනය.

Mayor
Municipal Council
Jaffna.
Phone (O) -021-2744
Fax: 021-2275
Res: 021-2334, 2335




மாண்பு மிகு யாழ். மாநகர முதல்வரின்

# வாழ்த்துச் செய்தி.

யாழ். மாநகரசபை ஊழியர் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம் 50ஆவது ஆண்டு மலருக்கு ஆசி வழங்குவதில் மட்டற்ற பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த காலங்களில் யாழ் மாநகரசபை, உதவி முதல்வராகவும், முதல்வராகவும் இருந்து சங்கத்தின் செயற்பாடுகளையும், அதன் வளர்ச்சியையும் உன்னிப்பாக கவனித்து, உணர்ந்து வருபவன் என்ற வகையில் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம் பல வழிகளிலும் சங்க அங்கத்தவர்கள் பயனடையக் கூடியவாறு செயற்திட்டங்களை வகுத்து செயற்பட்டு இன்று நிரந்தர கட்டிடத்தில் 50 ஆவது அகவை கொண்டாடும் அளவிற்கு முன்னேற்றம் அடைந்திருப்பது கண்டு உள்ளம் பூரிக்கின்றேன்.

முன்னை நாள் மாநகர முதல்வர். அமரர். பொன். சிவபாலன் அவர்களின், கனவு இன்று நனவாகுவதையும், நாம் எல்லோரும் உணரக் கூடியதாக உள்ளது.

சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்கள் சமூகத்தின் கண்ணாடிகள், சங்கம் வளர்ச்சியடைய காரணகர்த்தாவாய் இருப்பவர்கள் சங்க செயற்பாட்டுக் குழுவினர், நலன் விரும்பிகள், அங்கத்தவர்கள் ஆவர். மேலும் சங்க வளர்ச்சிக்கு உறுதுணையாயிருக்கும் யாவருக்கும் நன்றி கூறி, மேலும் பல வளம் பெற்று வளர்ந்து வழிகாட்ட வேண்டும் என யாழ். நகர மக்கள் சார்பிலும், எமது சார்பிலும் வாழ்த்துவதில் உவகையடைகின்றேன்.

**நடராஜா இரவிராஜ்**

**முதல்வர்,**

**யாழ். மாநகரசபை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IV

ඩග්ලස් දේවානන්දා පා.ම.
යාපනය දිස්ත්‍රික්කය

கே. என். டக்ளஸ் தேவானந்தா பா.உ.
யாழ் மாவட்டம்

K. N. DOUGLAS DEVANANDA MP
JAFFNA DISTRICT

උතුර සංවර්ධන පුනරුත්ථාපන, ප්‍රතිසංස්කරණ හා
උතුර හා නැගෙනහිර දෙමළ කටයුතු අමාත්‍ය

வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும்
வடக்கு கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சர்

MINISTER OF DEVELOPMENT, REHABILITATION
AND RECONSTRUCTION OF THE NORTH AND
TAMIL AFFAIRS, NORTH AND EAST

දුරකථන අංකය. / தொலைபேசி இல. / Telephone No. } 382060

ෆැක්ස් / பக்ஸ் / Fax } 424109



## மாண்பு மிகு வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சரின்

# வாழ்த்துச் செய்தி.

### நூற்றாண்டுகளையும் கடந்து நிலைபெறட்டும்

யாழ்ப்பாண மாநகரசபையின் ஊழியர் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம் தனது ஐம்பதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதையிட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். ஐம்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து துடிப்புடன் செயலாற்றுவது இலகுவான காரியமல்ல. ஐம்பது ஆண்டுகள் என்பது சாதாரணமாக ஒரு மனிதனின் வாழ்க்கைக் காலம். இந்த வாழ்க்கைக் காலத்தைப் பூர்த்தி செய்வது என்பதற்கிடையில் தனிமனிதன் பிணி, மூப்பு போன்றவற்றிற்கு இலக்காகி நொந்து போகக்கூடும். இதனால் தான் ஐம்பது ஆண்டைக் கடந்து நிற்பதை அரிய சாதனையாக பொன் விழாவாகக் கருதுகின்ற வழக்கம் வந்திருக்கக்கூடும்.

முன்னவர் விதைத்துச் சென்ற வித்து இன்று விருட்சமாகி நிற்பது போல யாழ் மாநகரசபை ஊழியர் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கமும் ஆல் போல விழுதுவிட்டு அறுகு போல வேரோடி வளர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

பொன்விழாக் கொண்டாடும் இச் சங்கம் நூறாண்டுகளையும் கடந்து நிலைபெறட்டும்

நன்றி

வணக்கம்.

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
**பா.உ. செயலாளர் நாயகம் ஈபீடிபி**
**வடக்கு அபிவீருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு**
**மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் வீவகாரங்கள் அமைச்சர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூராட்சி ஆணையாளர் வழங்கிய

# வாழ்த்துச் செய்தி.

யாழ்ப்பாண மாநகரசபை ஊழியர் சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம் தனது 50ஆவது அகவைப் பூர்த்தி செய்தமையை முன்னிட்டு வெளியிடப்படும் பொன்விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றினை வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

கூட்டுறவுச் சங்கமொன்று 50 ஆண்டுகள் தொடர்ச்சியாக இயங்கி வருவது என்பத சாதாரண விடயமல்ல. அவ்வாறானதொரு சங்கத்தில் நானும் ஒரு அங்கத்தவனாக இருப்பதனால் எனக்கு இரட்டித்த மகிழ்ச்சி ஏற்படுவது இயல்பானதே.

10 ஆண்டுக்கு மேலாக நான் அங்கத்துவம் பெற்றிருந்த காலத்தில் சங்கத்தின் பொருளாதார நிலையை நன்கு அறிந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. ஆரம்பத்தில் அங்கத்தவர்களின் தேவைக்கேற்ற கடனை வழங்கமுடியாத நிலை காணப்பட்டது. அப்போது சங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று அதனை நிர்வகித்த தலைவர், செயலாளர், பொருளாளர் போன்றோர் வங்கிகளிடம் கடன் பெற்று அங்கத்தவர்களுக்கு அதிகரித்த வட்டியுடன் கடனை வழங்கலாமென எண்ணி ஒவ்வொரு வங்கி முகாமையையும் சந்தித்து தமது எண்ணம் கைகூடாது விரக்தியடைந்து இருந்தமையை நான் நன்கறிவேன்.

தன்கையே தனக்குதவி என்றே உறுதி பூண்டு சிறுகச் சிறுகச் சேமித்து வந்ததுடன் மேற்குறித்த தலைமை நிர்வாகிகளான திரு சிவசுப்பிரமணியம், திரு இரத்திரனசிங்கம், அமரர் பத்மநாதன் ஆகியோரின் அயராத முயற்சியின் பயனாக சங்கத்தினால் நிர்வகிக்கப்பட்ட சிற்றுண்டிச் சாலையிலிருந்து அவர்களது காலத்தில் நிகர இலாபமாக பெருந்தொகைப் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டு அப்பணம் முழுவதும் அங்கத்தவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டமை சங்கத்தின் வளர்ச்சியில் ஒருமைற்கல்லாகும். அன்று ஆரம்பித்த சங்கத்தின் வளர்ச்சி தற்போது தனக்கென சகல வசதிகளையும் கொண்ட கட்டிடத்தினை அமைத்துக் கொள்ளும் அளவுக்கு வளர்ந்திருப்பதற்கு ஒவ்வொரு காலத்திலும் சங்கத்தினை நிர்வகித்தவர்களின் அரும்பணியே காரணமாகும்.

தற்போது திறக்கப்படவுள்ள சங்கத்தின் அலுவலகக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. மிகக் குறுகிய காலத்தில் கட்டிட வேலைகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டு சங்கம் புதிய கட்டிடத்தில் இயங்கவிருப்பது மிகவும் மகிழ்ச்சியானதொரு நிகழ்வாகும்.

அங்கத்தவர்களின் நிதித் தேவையை மட்டும் நிறைவு செய்வதில் சங்கம் முழுமையாக ஈடுபடாது வருமானத்தை ஈட்டக்கூடியதும், அங்கத்தவர்களுக்குப் பயன்படக்கூடியதுமான பல்வேறு தொழில் முயற்சிகளில் தன்னை ஈடுபடுத்தி எதிர்காலத்தில் யாழ் மாவட்டத்திலேயே மிகப் பெரிய கூட்டுறவு சங்கமாக மிளிர வேண்டுமென மனதார வாழ்த்துகின்றேன்.

"கூட்டுறவு நாட்டுயர்வு"

**வே.பொ.பாலசிங்கம்**
**உள்ளூராட்சி ஆணையாளர்**
**வடக்குக் கிழக்கு மாகாணம்**
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர ஆணையாளரின்

# வாழ்த்துச் செய்தி.

யாழ் மாநகர சபை ஊழியர் சிக்கன கடனதவுக் கூட்டுறவுச் சங்கம் தனது அரை நூற்றாண்டு நிறைவினையொட்டி வெளியிடும் பொன்விழா மலருக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன்.

03.04.1951இல் ஸ்தாபிக்கப்பட்ட சிக்கன சங்கமானது ஆரம்பகாலத்தில் சிறப்பாக இயங்காதபோதிலும் கடந்த ஒரு தசாப்த காலத்தில் அதன் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை எட்டியுள்ளது என்றால் மிகையாகாது.

தனக்கென ஒரு நிரந்தரக் கட்டிடத்தைத் தற்போது பெற்றுள்ள இச் சங்கம் எதிர்காலத்தில் முழுவீச்சில் செயற்பட்டு தனது அங்கத்தவர்களின் அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்யுமென நம்புகின்றேன்.

யாழ் மாநகர சபையின் சகல துறைகளையும் சேர்ந்த பணியாளர்களை அங்கத்தவர்களாகக் கொண்டுள்ள சிக்கன கடனுதவுச் சங்கம் எம் அனைவருக்குமிடையே ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தி கூட்டுறவின் மகிமையை விளக்கும் ஒரு சாதனமாக செயற்பட வேண்டுமென உளமார வாழ்த்துகின்றேன்.

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு!

**இ. இராமலிங்கம்**
**மாநகர ஆணையாளர்**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ பிரதி முதல்வரின்

# வாழ்த்துச் செய்தி.

யாழ்ப்பாண மாநகரசபை ஊழியர் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம் தனது அரை நூற்றாண்டை கொண்டாடும் முகமாக வெளியிடப்படும் பொன் விழாமலரின்ற்கு வாழ்த்துச் செய்தி ஒன்றினை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ்ப்பாணத்தின் தற்போதைய சூழலில் ஓர் கூட்டுறவு சங்கமானது 50 ஆண்டுகள் தொடர்ந்து இயங்கி பொன் விழா கொண்டாடும் அளவிற்கு வளர்ச்சியடைந்துள்ளதென்றால் அதற்கான காரணம் சங்க அங்கத்தவர்களினதும் செயற்குழுவினதும் கூட்டுறவே ஆகும்.

மேற்படி சங்கதில் கால் நூற்றாண்டு காலத்திற்கு அங்கத்தவராக இருந்து சங்கத்தின் தற்போதைய வளர்ச்சியை இட்டும் சங்கத்தின் ஆரம்பகால நடவடிக்கைகளையும் உற்று நோக்கின் அண்மைய காலத்தில் சங்க அங்கத்தவர்களிற்கு இடர்கடன் விஷேட கடன் பண்டிகை முற்பணம் என சங்க அங்கத்தவர்கள் தேவை, என கோரும் பட்சத்தில் வழங்கி வரும் நடைமுறை செயற்பாட்டுடன் அங்கத்தவர்களின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக அவர்களை ஊக்குவிக்கும் வகையில் நல் நோக்குடன் சங்க இலாபத்தை பகிர்ந்தளிக்கும் செயற்திட்டமானது போற்றுதற்குரிய விடயமே.

ஆயினும் அங்கத்தவர்களின் நிதி தேவையை மட்டும் பூர்த்தி செய்வதாக அல்லாது பல்வேறு தொழில் முயற்சிகளிலும் ஈடுபட்டு சங்க அங்கத்தவர்கள் பயன் அடையக்கூடியவாறு விழுதுகள் விட்டு வளமுடன் ஒளிவீசி மளிர வேண்டும் என வேண்டி மனதார வாழ்த்துகின்றேன்.

**செ. கந்தையன்**
**பிரதி முதல்வர்**
**மாநகர சபை**
**யாழ்ப்பாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். அரச அதிபர் அவர்கள் வழங்கிய

# வாழ்த்துச் செய்தி.

யாழ் மாநகரசபை ஊழியர்கள் சிக்கன கடனுதவிக்கூட்டுறவுச் சங்கம் கடந்த ஐம்பது வருடகாலமாக மாநகரசபை ஊழியர்களுக்கு பல வழிகளிலும் இலகு கடனாக பண உதவிகளைச் செய்து தனது ஐம்பதாவது நிறைவையொட்டி விழா மலரொன்றை வெளியிடுவதையிட்டு எனது மனமகிழ்ச்சியை தெரிவிக்க விரும்புகின்றேன்.

அவர்களது இம் மலரில் இச் சங்கத்தின் சேவையை மெச்சி எனது வாழ்த்துரையை வழங்குவதற்கு சந்தர்ப்பம் அளித்ததற்காக நன்றியை தெரிவிப்பதோடு இச் சங்கம் மென்மேலும் வளர்ந்து மேலும் பல்வேறு வழிகளில் உறுப்பினர்களுக்கு சேவை செய்து வளர வேண்டுமென எனது ஆசி உரையையும் உறுப்பினர்களுக்கு வழங்குகின்றேன்.

க. சண்முகநாதன்
அரச அதிபர்
யாழ்ப்பாண மாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகாதார சேவைகள் திணைக்கள கணக்காளர் வழங்கிய

# வாழ்த்துச் செய்தி.

1951இல் ஸ்தாபிக்கப்பட்ட யாழ். மாநகரசபை ஊழியர் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம் தனது 50 ஆவது அகவை நிறைவு செய்து கொண்டு 51 வருட சேவைக்கு தன்னை தயார்படுத்தி வருகின்ற இவ் வேளை அதன் சேவை மென்மேலும் பல்கிக் பெருக வேண்டுமென வாழத்துவதில் பெருமகிழ்வு கொள்கின்றேன்.

இச்சங்கமானது கூட்டுறவு, சேமிப்பு, கடன்வழங்கல் பணிகளை செவ்வனெ நிறைவேற்றி ஐந்து தசாப்த காலங்களுக்கு மேலாக பல அனுபவம் வாய்ந்த கூட்டுறவாளர்களால் வழிநடாத்தப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மாநகரசபையில் பணியாற்றிய, பணியாற்றுகின்ற 1500க்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட இச் சங்கம் தொழிலாளர்களின் அடிப்படை வசதிகளுக்கும் அவர்களது வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கும் அயராது பாடுபட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அத்துடன் யாழ் மாவட்டத்திலுள்ள சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் பெரியதும் மிக நீண்டகால வரலாற்றைக் கொண்டதும் இச் சங்கம் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இதன் பணி மென்மேலும் பல்கிப் பெருகி வெற்றிப் பாதையில் வீறு நடைபோட வேண்டும் எனவும் வாழி வாழி பல்லாண்டு! என்றும் வாழ்த்தி மகிழ்கின்றேன்.

பிரதி மாகாணப்பணிப்பாளர் அலுவலகம்
**சுகாதார சேவைகள்**
**யாழ்ப்பாணம்**

**க.தனரஞ்சிதராஜன்**
**கணக்காளர்**
**மேற்படி சங்க விசுவாசியும்**
**முன்னாள் உறுப்பினரும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின்

# வாழ்த்துச் செய்தி.

கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கு வடபகுதியில் முன்னோடியாக விளங்கியவை சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களாகும். யாழ்ப்பாண மாநகரசபை ஊழியர் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கமும் இத்தகைய வகையில் 1951ஆம் ஆண்டு தொடக்கம் கூட்டுறவு கோட்பாடுகளுக்கு அமைய பாராட்டும் படியாக செயற்பட்டு வருகின்றது. யாழ் மாவட்டத்தில் நிறுவன ரீதியாக பதிவு செய்யப்பட்டு இயங்கிவரும் சிக்கன கடனுதவு சங்கங்களில் கூடிய அங்கத்தவர்களையும், கூடிய சொத்துக்களையும்தன்னகத்தே இச்சங்கம் கொண்டுள்ளது என்று கூறினால் அது மிகையாகாது. 600 ற்கு மேற்பட்ட அங்கத்தவர்களையும் 08 மில்லியன் ரூபாவிற்கு மேலான சொத்துக்களையும் கொண்டுள்ளதுடன் இருபணியாளர்களையும் சேவையில் அமர்த்தி ஓர் அலுவலகத்தையும் கொண்டு செயற்பட்டு வருகின்றது. சங்கம் இலாபகரமாகச் செயற்பட்டு வருவதுடன் அங்கத்தவர் சேமமாக 05 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட தொகையும் கொண்டுள்ளது. இவையெல்லாம் சங்கத்தின் வளர்ச்சிக்கான எடுகோள்களாகக் காணப்படுகின்றது.

இச் சங்கத்தில் மாநகரசபையில் கடமையாற்றும் சகல தரப்பணியாளர்களும் அங்கத்தவர்களாக இணைந்து சங்கத்தின் உயர்ச்சிக்காக ஒன்றுபட்டு செயற்படுவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. சங்கம் பொன்விழா கொண்டாடுவதையிட்டும் சங்க வளர்ச்சியை எடுத்துக் காட்டுவதற்காக மலர் ஒன்று வெளியிடுவதை இட்டும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை இச் சந்தர்ப்பத்தில் தெரிவிப்பதில் நான் மிகவும் பெருமை கொள்கின்றேன்.

தொடர்ந்தும் சங்கம் தனது சேவைகளை மேலும் விரிவுபடுத்தி பலரும் போற்றும்படி செயற்படும் எனவும் அசையாத நம்பிக்கை கொண்டுள்ளேன்.

"கூட்டுறவில் இணைவோம்
நன்மைகளைப் பெறுவோம்"

**கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகம்,**
**857 கே. கே. எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்**

**செ.கு. சண்முகநாதன்**
**கூட்டுறவு அபிவிருத்தி உதவி**
**ஆணையாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்துக்குமாரு தவநாதன்
மாநகர சபை உறுப்பினர்
(சமாதான நீதவான்)
வதிவிட முகவரி:
50/25 வைரவர் கோவில் வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.
அலுவலக முகவரி:
இல. 5, முதலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

Muthukumaru Thavanathan
Member of Municipal Council
(Justice of the Peace)
Resident Address:
50/25, Vairavar Kovil Veethy,
Koddady,
Jaffna.
Office Address:
No. 5, 1st, Cross Street,
Jaffna.

**கௌரவ யாழ். மாநகர சபை உறுப்பினர் திரு மு. தவநாதனின்**

# வாழ்த்துச் செய்தி.

## கூட்டுறவே நாட்டுயர்வு!

உழைக்கும் வர்க்கத்தின் உன்னத பணியில் தனது அரை நூற்றாண்டை நிறைவு செய்து நிற்கும் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தினையும் அதன் உறுப்பினர்களையும், வாடிக்கையாளர்களையும் பாராட்டி வாழ்த்துவதில் அகமகிழ்கின்றேன். சங்கத்தின் தலையில் நரை விழுந்தாலும் களங்காணாப்பணியில் கறை விழாது குறைவிலாது பணிகள் திரைவிழாது தொடர நல்லைக் குமரனை வேண்டி நல்வாழ்த்துக்களையும் நல் ஆசிகளையம் வழங்குகின்றேன்.

**இல. 50/25இ**
**வைரவர் கோவில் வீதி,**
**கொட்டடி,**
**யாழ்ப்பாணம்**

**முத்துக்குமாரு தவநாதன் (புளொட்)**
**கௌரவ சபை உறுப்பினரும்,**
**நிதிக்குழு உறுப்பினரும்,**
**யாழ். மாநகராட்சி மன்றம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ யாழ். மாநகர சபை உறுப்பினர் திரு. மறுவல் மங்கள நேசனின்

# வாழ்த்துச் செய்தி.

50ஆவது வருடப் பூர்த்தியைக் கொண்டாடும் யாழ் மாநகர சபை சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம் பொன்விழா காணும் இவ்வேளையில் அதனை நடாத்திய நடாத்தும் நிர்வாக சபையினருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

யாழ் மாநகரசபையின் சிற்றூழியர் நலனில் கூடுதலான அக்கறை கொண்டு இயங்கும் இச் சங்கத்தில் சகல மட்டத்திலும் நிர்வாக சபையிலுள்ளவர்கள் இடம் பெற்றிருப்பது இதனுடைய வளர்ச்சியின் முதற்காலாகும்.

கடந்த 50 வருட காலமாக சிறந்த சேவையை ஆற்றிய இச் சங்கத்தின் வழி நடாத்துனர்கள் சிறந்த பண்பாளர்கள் என்பது யாழ் மாநகர சபையின் சகல பகுதியிலிருந்தும் அறியக் கூடியதாகவுள்ளது

தொடர்ந்தும் இனிவரும் காலத்திலும் சிறந்த சேவையை ஆற்ற வேண்டும் என நல் மனதோடு வாழ்த்துகின்றேன்.

**மனுவல் மங்கள நேசன்**
**மாநகர சபை உறுப்பினரும்**
**சுகாதாரக் குழு உறுப்பினரும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாணம் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வ. து**

*பதிவு எண் யா/1670 — 1982-03-02 திகதி*

**JAFFNA DISTRICT THRIFT AND CREDIT CO-OPERATIVE SOCIETIES UNION LTD.**

637, ~~182-1~~, Stanley Road,
JAFFNA.

637, கே. கே. எஸ் ~~182-1~~, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவச் சங்கங்களின் சமாசத் தலைவர் அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி.

யாழ் மாநகரசபை ஊழியர் சிக்கன கடனதவி கூட்டுறவுச் சங்கம் தனது 50ஆவது ஆண்டு நிறைவை விழாவெடுத்துச் சிறப்பிப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன். தனத அங்கத்தவர்களின் தேவைகளை உணர்ந்து சேவையாற்றும் இச் சங்கம் அங்கத்தவர்களின் நன்மை கருதி நல்ல புதிய செயல் திட்டங்களை வகுத்து மேலும் சிறப்பும், வளர்ச்சியும் அடைய வேண்டுமென மனப்பூர்வமாக வாழ்த்துகின்றேன். அத்துடன் இச் சங்க செயற்பாடுகள் விரிவுபட சமாசத்துடனான கல்வி, நிதி ஏனைய செயற் திட்டங்களிலும் பங்காற்றி மென் மேலும் திறமையாக செயல்பட வாழ்த்துகின்றேன்.

**திரு சச்சிதானந்தம் முருகனேசன்**
**தலைவர்**
**யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு**
**கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ.து)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**S.A.K. KINGSLY GANESAN**
JUSTICE OF PEACE
MEMBER OF MUNICIPAL COUNCIL
JAFFNA

No.7. VAIRAVAR KOVIL VEETHY,
ARIYALAI WEST,
JAFFNA,
SRI LANKA.
T.P ..........................
DATE : 31/08/200

**கௌரவ யாழ். மாநகரசபை உறுப்பினர் திரு. எஸ்.ஏ.கே. கிங்ஸ்லி கணேசன் அவர்கள் வழங்கிய**

# வாழ்த்துச் செய்தி.

வளம் பல கண்டு 50 ஆண்டுகளாக வளர்ந்து குன்றின் தீபமென நின்று நிமிர்ந்து இன்று பொன் விழா காணும் யாழ் மாநகரசபை ஊழியர் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம் மேலும் பல வளம் பெற்று வாழ வாழ்த்துவதில் நான் மட்டற்ற மன மகிழ்வுறுகின்றேன்.

அரைநூற்றாண்டு காலமாக சங்க அங்கத்தவர்களிற்கு எவ் எவ் வகையில் உதவ முடியுமோ அவ்வகையில் சங்க யாப்பு விதிக்கு ஏற்ப உதவி சங்கத்தை வழிப்படுத்தி செல்லும் செயற்குழுவின் செயற்பாடுகளும் இதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்கி கூட்டுறவை மேம்படுத்தும் சங்க அங்கத்தவர்களின் ஒற்றுமையைக் கண்டு உண்மையிலேயே என் உள்ளம் உவகையுறுகின்றது.

வடமாநிலத்திலே கூட்டுறவிற்கு எடுத்துக் காட்டாக ஒற்றுமையாக பெரிய சங்கமாக திகழும் யாழ் மாநகரசபை ஊழியர் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம் சகல வளங்களும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றேன்.

**S.A.K. கிங்ஸ்லி கணேசன் J.P**
**யா.மா. சபை உறுப்பினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத்தை வளர்த்த தலைவரின்

# வாழ்த்து

1951ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாண மாநகரசபை ஊழியர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கமானது 2001ஆம் ஆண்டில் தனது ஐம்பதாவது வயதினைப் பூர்த்தி செய்திருப்பதை முன்னிட்டு வெளியிடப்படும் பொன்விழா மலருக்கு வாழ்த்துத் தெரிவிப்பதையெண்ணி பேருவகையடைகின்றேன்.

மேற்படி சங்கம் நிதிவளம் குன்றி நலிவுற்றிருந்த வேளையில் அதன் தலைமைப் பொறுப்பை அதாவது 1991ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக 03 தடவைகள் ஏற்று அக்காலப் பகுதிகளில் குறிப்பாக மாறி மாறி செயலாளர் மற்றும் பொருளாளர் பதவிகளை வகித்த அமரர் பத்மநாதன், திரு.இ.இரத்தினசிங்கம் ஆகியோரினதும் ஏனைய நிர்வாக சபை உறுப்பினர்களினதும் ஒத்துழைப்பு மற்றும் வழிகாட்டலில் சங்கம் படிப்படியாக நிதிவளத்தைப் பெருக்கி தலைநிமிர ஆரம்பித்தது.

ஏற்கனவே அமுலிலிருந்த சங்கத்தின் துணைவிதிகள் அங்கத்தவர்களின் அக்காலத் தேவைகளை நிறைவு செய்வதற்கு ஏற்றதாக இல்லாதிருந்தமை பெருங் குறைபாடாகவே உணரப்பட்டது.

காலத்தின் தேவைக்கேற்றவாறும் அங்கத்தவர்களின் நலனை முதன்மைப்படுத்தும் விதத்திலும் முன்னர் சங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தவரும் கூட்டுறவுத் துறையில் தேர்ச்சியும் அனுபவமும் மிக்கவராக விளங்கிய திரு.இ.இரத்தினசிங்கம், முன்னாள் மாநகரசபையில் கணக்காளராகப் பதவி வகித்த திரு.க.தனரஞ்சிதராஜன் ஆகியோருள்ளிட்ட உப குழு நியமிக்கப்பட்டு சங்கத்தின் யாப்பு மீள வடிவமைக்கப்பட்டு 30.03.1994ஆம் திகதிய விசேட பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக அது அங்கீகரிக்கப்பட்டு எம்மால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

சங்கத்தின் அமைப்பு விதி மாற்றம், சங்கத்தினால் நிர்வகிக்கப்படும் சிற்றுண்டிச்சாலையிலிருந்து முன்னரோ அல்லது பின்னரோ அதாவது இன்றுவரை கிடைக்கப்பெறாத அதியுயர் வருமானம் கிடைத்தமை போன்றவற்றால் சங்கத்தின் நிதிவளம் கணிசமான அளவு அதிகரித்தது. கடனை வழங்குவதற்காக காத்திருப்போர் பட்டியல் தயாரக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட வழமை மாறி கடனுக்காக விண்ணப்பிப்பவர்களுக்கு உடனடியாகவே அதனை வழங்கும் நிலை உருவாகியது.

எமது நிர்வாக காலத்தில் அங்கத்தவர்களுக்கு நன்மை பயக்கக்கூடிய பல திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்தி வெற்றிகண்டோம் என்ற பெருமையோடு சங்கம் தனக்கெனவொரு நிரந்தர கட்டிடத்தைப் பெற்றிருப்பது குறித்து மனநிறைவெய்துகின்றேன்.

சிக்கனச் சங்கம் மென்மேலும் வளர்ச்சிபெற்று தனது குறிக்கோளை எய்த வேண்டுமென உளமார வாழ்த்துகின்றேன்.

**த.சிவசுப்பிரமணியம்**
**முன்னாள் தலைவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dear fellow members

It givs me great pleasure to send this message on the eve of the 50th Anniversary celebration of the (Jaffna) municipal council employees co-op Thriftsociety for its half new century and entering in new millennium and its invisible determination and courage that is in - deed has superseced all obstaeles to march forward to provide a better quality of benifits to all members by the office bearers such as late Ratnarajah, Panchalingam and formec Ponnukone respectively whom were dedicated their entire sactrification. Towards the benifit of the minor grade employees. It is past but not forgetable that great men all remembered always decades to decacdes for tendering instant relief on humanity grounds.

I do not forget the past when being central market care taker, I pleaded rupees fifty for a couple of happiness of course given though it couldn't be by the said gentlemen. There was a time which I still remember that messrs. Ratnarajah and Panchalingam resp. both had rescued me from a great dificulty by recommending for a loan as a special regards. Man may be poor onec but never be poor always. Your Society (IS) was a helpful and faithful servant to my present possition, pl.

Thanking you

**VELAN SINNATHAMBY RTD. CARE - TAKER**
**MANAGING DIRECTER**
**KADJAN COMMUNICATION**
JAFFNA,
T.P. 021- 3230



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவரின் இதயத்திலிருந்து....

கடந்த ஐந்து தசாப்த்தங்களைக் கடந்து இன்று பொன்விழாவினைக் கொண்டாடும் எமது யாழ் மாநகர சபை ஊழியர் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தில் ஒரு தாசாப்தத்திற்கு முன்னரே உறுப்பினராகக்கூடிய வாய்ப்பு எனக்கு கிடைத்தது. இச் சங்கமானது உறுப்பினர்களுக்கு அளிக்கின்ற உதவிகள் எவரவேற்கக் கூடியன. ஆயினும் ஒரு சில குறைபாடுகள் அவதானிக்கக் கூடிய்தாக இருந்தன. குறிப்பாக வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் செயற்குழுவினரை பகிரங்கமாகக் கையுயர்த்தி தெரிவு செய்யும் முறையானது, கூட்டுறவுக் கொள்கைக்கு முரணாக இருந்தது. இம்முறையை மாற்றி ஜனநாயக மரபுக்கிணங்க இரகசிய வாக்கெடுப்பு முறையினை அறிமுகம் செய்யுமாறு 1993இல் கடந்த 29ஆவது வருடாந்த பொதுக்கூட்டத்தில் கோரிக்கை விட்டோம். இதன் பிரகாரம் 1994இல் உபவிதி திரத்திம் செய்யப்பட்டு, 1994இல்இடம் பெற்ற 30ஆவது வருடாந்த பொதுக் கூட்டத்தில் இரகசிய வாக்கெடுப்பு மூலம் செயற்குழு தெரிவு செய்யப்பட்டது.

எமது சங்கத்தின் முக்கிய நோக்கமானது உறுப்பினர்களின் இடர்களைக் களைந்து சேமிப்பை அதிகரித்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதாகும் . இடர்களைக் களைவதற்காக சேமிப்புக் கடன், இடர்கடன், விசேட கடன் போன்றவை குறைந்த வீத வட்டியில் வழங்கப் படுகின்றது. உறுப்பினர்களின் பிள்ளைகளின் கல்விக்காக சங்க நிகர இலாபத்தில் 10% செலவிடப்படுகின்றது. இது அப்பியாசக் கொப்பிகளாக கடந்த காலங்களில் வழங்கப்பட்டன. உறுப்பினர்களின் சாதாரண சேமிப்புக்கு 12 % வட்டி வழங்கப்படுகின்றது. இது வங்கிகள் சாதாரண சேமிப்புக்கு வழங்ககுகின்ற வட்டிவீதத்தினை விட 3% கூடவாகும். 1995இல் இடம் பெற்ற வரலாறு காணாத இடப் பெயர்வு, கடந்த வருடம் மேமாதத்தில் எற்பட்ட இடப் பெயர்வு போன்ற சந்தர்ப்பங்களில் உறுப்பினர்களின் சேமிப்புக்களை கருத்திற் கொள்ளாது கடன்கள் வழங்கி அவர்கள் இடர்கள் களைந்துள்ளோம். இத்துடன் அவர்கள் சங்கத்திலிருந்து இளைப்பாறும் போது பலவித நன்மைகள் பெறுகின்றன.

இச் சங்கமானது 1951இல் ஆரம்பிக்கப்பட்டு படிப்படியாக வளர்ச்சியடைந்து, இன்று யாழ் மாவட்டத்திலேயே உள்ள சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களில் பெரியது எனும் பெருமையை பெற்று நிலைத்து நிற்கின்றது. ஆயினும் இச்சங்கத்திற்கென ஒரு கட்டிடம் இல்லாத பெரும் குறைபாடாக இருந்தது. 1998 இந்துவிடுதிக் குண்டு வெடிப்பின் பின் இக்கட்டிடப் பிரச்சினை பெரிதாக விஸ்வரூபமெடுத்தது. இந்நிலையில் எமது பரிதாப நிலையை உணர்ந்து சித்த மருத்துவ பிரதம வைத்திய அதிகாரி திரு வி.வேதநாதன் அவர்கள் தமது அலுவலகத்தில் ஒரு பகுதியைத் தற்காலிகமாகத் தந்துதவினார். தற்காலிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் நீடிக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் கடந்து விட்டநிலையிலும் நிரந்தரக் கட்டிடம் அமைக்கும்வரை பொறுமையாக இருந்த பிரதம வைத்திய அதிகாரி அவர்களுக்கும் அவரது பகுதியனர்களுக்கும் நாம் என்றும் நன்றி கூறக் கடமைப்பட்டவர்களாவோம். 1990க்கு முன் மாநகர ஊழியர் நலன்புரிச் சங்கத்தால் நிர்வகிக்கப்பட்டு வந்த மாநகரசபை சிற்றுண்டிச்சாலை 18.2.1990 இல் எமது சங்கத்துக்கு கைமாறியது. இச்சிற்றுண்டிச் சாலையானது ஒரு தற்காலிக தகரக் கொட்டகையில் இயங்கி வந்தது. ஒரு நிறுவனமானது அதன் பணியாளர்ககளுக்கு செய்து கொடுக்கின்ற வசதிகளில் மிக முக்கியமானது சிற்றுண்டிச் சாலையாகும். ஒவ்வொரு திணைக்களங்களும் பணியாளரின் நன்மை கருதி, தமது செலவிலேயே பல்வேறு வசதிகள் கொண்ட சிற்றுண்டிச் சாலையை அமைத்துக் கொடுக்கின்றன. ஆனால் 1300 பேர் வரை பணிபுரிகின்ற யாழ் மாநகரசபையிலே சிற்றுண்டிச் சாலையானது அடிப்படை வசதிகள் அற்ற ஒரு தற்காலிகத் தகரக் கொட்டகையில் அமைந்திருந்தது. இதனால் குறிப்பிட்ட பணியாளர்கள் மட்டுமே இச் சிற்றுண்டிச் சாலைக்குச் செல்வதை அவதானிக்க முடிந்தது. குறிப்பாக அலுவலகத்தில் கடமையாற்றும் பெண்கள் இச்சிற்றுண்டிச் சாலைக்கு சென்றதைக் காணவே முடியவில்லை. இந்நிலையில் புஃதிய சிற்றுண்டிச் சாலை ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற நிலை உருவாகியது.

எனவே கடந்த மே 2000இல் சிற்றுண்டிச் சாலை அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து முன்னாள் மாநகர ஆணையாளர் திரு.வே.பொ.பாலசிங்கம் அவர்களுடன் எமது செயற்குழு கலந்துரையாடியபோது அவரும் அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி இக்கட்டிடமானது எதிர்காலத் தேவை கருதி வசதியான முறையில் அமைய வேண்டும் எனக் கூறி அதற்கான வரைபடத்தினை (Plan) உடன் தயாரித்துதருமாறு மரமத்துப் பொறியியலாளருக்கு பணிப்புரை வழங்கியதுடன் இக்கட்டிடத்தினை எமது சங்கமே அமைக்குமாறும் இதற்கு கடனாக ரூபா 200 000தை நலன் புரிச் சங்கம் எமது சங்கத்துக்கு வழங்கவும் ஏற்பாடு செய்து தந்து ஆகஸ்ட் 2000இல் அதற்கான அடிக்கல்லையும் நாட்டி எம்மை ஊக்கப்படுத்தியதுடன் இக்கட்டிடம் அமைப்பதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக் கொண்டனர்.

இதற்கமைவாக 30.09.2000 இல் நடைபெற்ற எமது சங்கத்தின் 34வது வருடாந்த பொதுக் கூட்டத்தில் சிற்றுண்டிச் சாலைக்கும் சங்க அலுவலகத்திற்குமான கட்டிடம் அமைப்பதற்கு பிரேரணை நிறைவேற்றப்பட்டதுடன் இக்கட்டிடம் அமைப்பதற்காக உறுப்பினர்கள் ஒவ்வொருவரிடமும் இருந்து ரூபா 100 அன்பளிப்பாகப் பெறுவது எனவும் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டமை, உறுப்பினர்கள் இக்கட்டிடம் அமைப்பதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு ஆவலாக உள்ளனர் என்பதை எடுத்துக்காட்டியது. இக்கட்டிடம் அமைப்பதற்கும் தளபாடங்களுக்கும் ரூபா 750000மதிப்பீடாகும். எனவே மிகுதி நிதியைத் திரட்ட ஓர் இசை நிகழ்ச்சியை நடாத்த ஆராயப்பட்டுள்ளது. ஆயினும் மாநகர சபைப் பணியாளர்கள் அனைவரினதும் நலன் கருதி அமைக்கப்படும் கட்டிடம் இது என்பதால் மாநகர முதல்வர் மாநகர உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து ஒரு குறிப்பட்ட தொகையை வழங்குமாறு கோருவது எனத் தீர்மானித்து மாண்புமிகு மாநகர முதல்வர் திரு.ந.இரவிராஜ் அவர்களை எமது செயற்குழு சந்தித்த போது, இக்கட்டிடம் பணியாளர் நலன் கருதி அமைக்கப்படுவதனால் நிச்சயமாக உதவி செய்வோம் எனக்கூறி தனது ஒதுக்கத்திலிருந்து ரூபா 25000 மும் ஏனைய உறுப்பினர்களின் ஒதுக்கத்திலிருந்து ரூபா 5000 வீதமும் மொத்தம் ரூபா 135000 வழங்கலாம் எனக் கூறியதுடன் மாதாந்த பொதுக்கூட்டத்திலும் அனைத்து உறுப்பினர்களுக்கும் கட்டிடத்தின் அவசியம் பற்றி விளக்கிக் கூறித் தீர்மானத்தையும் நிறைவேற்றி உதவினார். இது பற்றி கௌரவ மாநகர உறுப்பினர்களுடன் கலந்துரையாடிய போது அவர்களும் பேராதரவு வழங்கியமை, அவர்கள் பணியாளர்களின் தேவைகளை நன்கு புரிந்து கொண்டமையை எடுத்துக் காட்டுகின்றது. ஆனால் சபையில் கடமை புரிகின்ற ஒரு சிலர் புரிந்தும் புரியாமைபோல் நடந்து கொள்வது வேதனை தருகின்றது. இக்கட்டிடமானது ஒரு தனிப்பட்ட இராஜேஸ்வரனுக்காகவோ அல்லது சங்கத்தின் செயற்குழுவினருக்காகவோ அல்லது சங்க உறுப்பினர்களுக்காகவோ குறுகிய மனப்பாங்குடன் கட்டப்பட்டது அல்ல. நன்கு பரந்த மனப்பாங்குடன் மாநகர சபையின் அனைத்துப் பணியாளர்களும் பயன் பெறும் வகையிலும் மேலாக பொதுமக்களும் பயன் பெறும் வகையிலுமே அமைக்கப்பட்டுள்ளது. அதாவது மாநகர சபையில் பணிபுரியும் அடிமட்டப் பணியாளர்கள் முதல் ஆணையாளர் வரை எமது சிற்றுண்டிச்சாலை என மார்பு தட்டிக் கூறிக் கொள்ளலாம். மேலும் இக்கட்டிடத்திற்கான நிதியில் ஒரு பகுதியை வழங்குமாறு எமது செயற்குழு உறுப்பினர் சிலர் வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் விவகாரம் இந்துசமய கலாச்சார அமைச்சர் மாண்பு மிகு கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களை சந்தித்துக் கேட்ட போது கட்டிடம் கட்டுவதை வரவேற்று ரூபா 200000 வழங்கச் சம்மதித்ததுடன், ரூபா 100000 உடன் வழங்கியும் உதவினார். இவ்வாறாக நிதியளிப்பவர்கள் பணியாளர்களின் மீது கொண்டுள்ள அக்கறை பாராட்டுக்குரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றுண்டிச் சாலைக் கட்டிடம் மட்டும் அமைத்தால் போதாது, அது வசதிகள் கொண்டதாக பணியாளருக்கு இருக்க வேண்டும் என்ற நோக்கில் முன்னர் ரூபா 10000 குளிர்சாதனப் பெட்டி கொள்வனவுக்கும், தற்போது சிற்றுண்டிச்சாலையில் பொருத்துவதற்காக இரண்டு மின்விசிறிகளையும் அன்பளிப்புச் செய்தமை, இக்கட்டிடம் சிறப்புற அமைவதில் மாநகர முதல்வர் அவர்கள் கொண்டுள்ள ஆர்வத்தினையும் அக்கறையினையும் எடுத்துக் காட்டுகின்றது.

இக்கட்டிடம் அமைப்பது தொடர்பாக கூட்டுறவு அபிவிருத்தி ஆக்க உதவி ஆணையாளர் திரு.செ.கு.சண்முகநாதன் அவர்களை அணுகி ஆலோசனைகளையும் அனுமதிகளையும் கேட்டபோது அவர் வரவேற்று ஆலோசனை வழங்கி அங்கீகாரம் வழங்கியமை எமது சங்கம் மீது அவர்கள் கொண்டுள்ள அக்கறையை வெளிப்படுத்துகின்றது.

இவ்வாறாக இக்கட்டிடம் அமைக்கப்படுவதற்கு பலரும் பல வழிகளில் உதவியளித்துள்ளனர். இவர்கள் அனைவரும் என்றும் எமது நன்றிக்குரியவர்களாவர். குறிப்பாக மராமத்துப் பொறியியலாளர், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள், மேற்பார்வையாளர்கள், தொழிலாளர்கள், மின்பகுதி தொழில் நுட்பட உத்தியோகத்தர் அவர் தம் பணியாளர்கள் நீர் வேலைப் பொறியியலாளர்கள் அவர் தம்பணியாளர்மற்றும் இக்கட்டிட அமைப்புக்கு உதவிய அனைவரும் என்றும் எமது இதயத்தில் இடம் பெறுவர்.

இதேவேளை நீண்டகாலமாக சங்கத்தில் பொருளாளர் பதவியினை வகித்த அமரர்.சு.பத்மநாதன் அவர்கள் சங்கத்தின் வளர்ச்சிக்காக ஆற்றிய சேவைகள் மறக்க முடியாதவை. அவரை எமது சங்கம் என்றும் நினைவு கூறக்கடமைப்பட்டது.

இக்கட்டிடம் அமைக்கப்பட்டதன் மூலம் சங்கம் நிலையான இடத்தில் இயங்க வழி பிறந்ததுடன் சிற்றுண்டிச்சாலையானது தேவையான சிற்றுண்டிகளையும், உணவுகளையும் தரமாகத் தயாரித்து வழங்கக்கூடிய வசதியும் உருவாயியுள்ளது. இதன் மூலம் சங்க இலாபம் அதிகரித்து உறுப்பினர்களின் வாழ்க்கைத் தரம் உயரும் என எதிர்பார்க்கலாம். இந்த வெற்றிக்காக எம்மோடு தோளோடு தோள் கொடுத்து நின்ற செயலாளர், பொருளாளர், உபதலைவர், உபசெயலாளர், ஏனைய செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்

**இ.க.இராஜேஸ்வரன்**

**தலைவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாளரின் எண்ணத்தில் ....

யாழ்ப்பாணம் மாநகரசபை சிக்கன கடனுதவிக்கூட்டுறவுச் சங்கம் 1951ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதன் ஐம்பதாவது ஆண்டு நிறைவில் சங்க அலுவலகக் கட்டிடம் உட்பட தேனீர்ச் சாலைக்கான கட்டிடத் தொகுதியொன்றும் நிர்மானிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். அக்கட்டிடத் தொகுதியை நிர்மானித்து இயங்குவதற்கான சங்க ஆளுமைக் குழுவின் பொருளாளராக கடமையாற்றுவதிலும் மகிழ்வுறுகின்றேன்.

புதிதாக நிர்மானிக்கப்பட்ட கட்டிடத் தொகுதியை நிறைவு செய்வதற்கு

- கௌரவ மாநகர முதல்வரினதும் மாநகர மன்ற உறுப்பினர்களினதும் நிதி உதிவியும், ஒத்துழைப்பும் மாநகர சபை நிர்வாகத்தின் நிர்மாணப்பணி உதவியும் நிர்வாக உதவியும்
- மாண்பு மிகு புனர்வாழ்வு புனரமைப்பு இந்து கலாச்சார வடக்கு, கிழக்கு தமிழ்மொழி விவகார அமைச்சரின் நிதி உதவியும்
- சங்க அங்கத்தவர்களின் நிதி உதவியும், நலன் விரும்பிகள் நிதி உதவியும்
- கௌரவ மாநகர முதல்வரின் தனிப்பட்ட அன்பளிப்பு (குளிரூட்டி, மின்விசிறி,) உதவிகளும்
- கூட்டுறவு உத்தியோகத்தர்களின் உதவியும பேராதரவாய் அமைந்தன.

இக்கட்டிடத் தொகுதி நிர்மானமும் இயங்க வைத்தலுமான நிகழ்வும் சங்க வளர்ச்சியின் ஓர் மைல் கல்லாக சங்கத்தினை நெறிப்படுத்த ஊக்கமளித்து நினைவாக அத்திவாரக் கல்லை பதித்தவர் முன்னாள் யாழ் மாநகர சபை ஆணையாளர் தற்போதைய மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஆவார்.

இக் கட்டிடத் தொகுதி நிர்மானத்தில் அனைவரது ஒத்துழைப்பம் கிடைத்தமை எமது சங்கம் எதிர்காலத்திலும் தொடர்ந்தும் நல்லதொரு வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்லும் குறிகாட்டியாக அமைகின்றது. இவ்வாறாக சங்க வளர்ச்சியை தற்போதைய ஆளுமைக் குழுவின் தலைவராக இருந்து வழிநடாத்தும் திரு இராஜேஸ்வரன் அவர்கள் போன்று இனிவரும் காலங்களிலும் தாலைவர்கள் தோன்றி மிகச் சிறப்பாக வழிநடாத்துவார்கள் என்று நம்புகின்றேன்.

நன்றி

**திருமதி ஆனந்தி**

**பொருளாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிக்கனச் சங்கத்தின் வளர்ச்சிப் பாதையிலே ...

## - நினைவலைகள் சில -

யாழ்ப்பாண மாநகாரசபை ஊழியர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் எனத் தற்போது பெயர் கொண்டிலங்கும் சங்கமானது அதன் ஆரம்ப காலத்தில் "யாழ். மாநகரசபை உழியர் கூட்டுறவு கடனுதவி சிக்கனச் சங்கம்" எனவே பெயர் பெற்றிருந்தது.

03.04.1951ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்ட இச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டங்கள் அக்காலத்தில் அதனை நிருவகித்தவர்களின் அசமந்தப்போக்கு, சங்க நிதியில் ஏற்பட்ட சோர்வு, குறைந்தளவு எண்ணிக்கையான அங்கத்தவர்கள், சங்க வளர்ச்சியில் போதிய ஆர்வமின்மை போன்ற இன்னோரன்ன பல்வேறு காரணங்களினால் உரிய காலங்களில் தொடர்ச்சியாக நடைபெறவில்லை என்பதை கிடைக்கப்பெற்ற ஆவணங்கள் மற்றும் ஆதாரங்கள் மூலமாக அறியமுடிகின்றது.

யுத்த நிலைமைகள் மற்றும் இடப் பெயர்வு ஆகியவற்றால் சங்கத்தின் பல ஆவணங்கள் அழிந்தும், தொலைந்தும், பழுதடைந்தும் போயின. இந்நிலையில் கடந்த கால செயற்பாடுகளை ஆராய முற்பட்டபோது கடந்த 1972ஆம் ஆண்டு முதல் இடம்பெற்றுவரும் வருடாந்தப் பொதுக்கூட்ட அறிக்கைப் பதிவேட்டை மாத்திரம் சங்கப் பணிமனையிலிருந்து பெறமுடிந்தது.

28.01.1972 ஆம் திகதி சங்கத்தின் 19ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெற்றிருப்பதையும் 30.09.2000ஆம் திகதி 34ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் நிறைவுற்றிருப்பதையும் உற்று நோக்கும் போது சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றிருக்கவில்லையென்பது புலனாகின்றது. ஆயினும் 1990 ஆண்டு முதல் மேற்குறித்த பொதுக்கூட்டங்கள் ஒவ்வோர் ஆண்டும் தொடர்ச்சியாக நடைபெற்று வந்த போதிலும் 1995ஆம் ஆண்டு நாடு என்றுமே கண்டிராத இடப்பெயர்வு காரணமாக அவ்வருடத்திற்கான பொதுக்கூட்டம் இடம்பெறவில்லை. எனினும் 1996ஆம் ஆண்டு முதல் அக்கூட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

1949ஆம் ஆண்டு மாநகர அந்தஸ்த்தை பெற்றுக் கொண்ட யாழ்ப்பாண மாநகரசபையின் அலுவலக வளாகத்தில் 1951ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட சங்கம் தனது ஆரம்பகாலப் பணிமனையைக் கொண்டிருந்தது. ஆரம்பகாலத்தில் அங்கத்தவர்களின் பணமுடையை நீக்கும் பொருட்டு விசேட கடன் வழங்குவதையே சங்கம் தனது பிரதான நோக்கமாகக் கொண்டிருந்தது. அங்கத்தவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தமையினால் சங்கம் எதிர்கொண்ட பிரச்சனைகளும் மிகக் குறைவாகவே காணப்பட்டன. அக்காலத்தில் ஒரு குறிப்பிட்ட தலைமை நிர்வாகிகளே சங்கத்தை நிர்வகித்து வந்தமையை பழைய தலைமுறையினரிடம் விசாரித்த போது அறிய முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத்தில் அமுலிலிருந்த சங்கத்தின் அமைப்பு விதியின் பிரகாரம் விசேட கடனாக வழங்கப்பட்டுவந்த ரூபா 1500ஐ 28.11.1982 ஆம் திகதி நடைபெற்ற 22ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் ரூபா 3000 ஆக அதிகரித்து வழங்கும் விதத்திலும் ஐந்து வருடகால அங்கத்துவத்தைப்பூர்த்தி செய்துள்ள அங்கத்தவர்களுக்கு ரூபா 1000/= ஐ பண்டிகைக் கடனாக வழங்கி 10 மாதாந்தத் தவணைகளில் 6% வட்டியுடன் அறவிடவும் கூடியதாக உபவிதி திருத்தம் செய்யப்பட்டது.

அங்கத்தவர்களின் தேவைக்கேற்றவாறு விசேட கடனை வழங்கக்கூடியதாக சங்கத்தின் நிதிவளம் இல்லாதிருந்த காரணத்தினால் அவசரமாகக் கடன் தேவைப்படுவோருக்கு மாத்திரம் அதனை வழங்குவதற்காக மக்கள் வங்கியில் இருந்து ரூபா 60 000 ஐ கடனாகப் பெற்று வழங்குவதென 09.07.1977 ஆம் திகதிய விசேட பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

சிக்கன சங்கம் மாநகரசபையின் ஓர் அங்கமாகத் திகழுவதை பல்வேறு சந்தர்ப்பங்களில் உறுதி செய்யும் விதத்தில் மாநகரசபையினால் ஆரம்பிக்கப்பட்ட பல செயறதிட்டங்களுக்கு அவ்வப்போது நிதியுதவி வழங்கி வந்துள்ளது. எடுத்துக்காட்டாக பின்வரும் நிகழ்வுகளைக் குறிப்பிடலாம்.

அ) மாநகரசபையில் தீயணைப்பு பிரிவு ஒன்றினை ஸ்தாபிக்கும் நோக்கோடு பொது ஸ்தாபனங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி கோரியபோது சிக்கன சங்கமும் ரூபா 1500 நன்கொடையாக வழங்கியது.

ஆ) இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டுமென்ற நோக்கில் மாநகர ஆணையாளரால் 15.06.1988இல் நடாத்தப்பட்ட ‘வெள்ளைக் கொடி தினத்திற்கு’ ரூபா 1500ஐ சங்கம் அன்பளிப்புச் செய்துள்ளது.

இ) 1993ஆம் ஆண்டு இடம்பெற்ற மே தினக் கொண்டாட்டச் செலவாக ரூபா 5890ஐ சங்கம் பொறுப்பேற்றுக் கொண்டது.

ஆரம்பகாலத்தில் சங்கத்தினை நிர்வகித்தவர்களின் பொறுப்பற்ற தன்மையினால் ஏற்பட்ட பணச் சோர்வாகிய ரூபா 9063/ 38 ஐ பதிவழிப்பது தொடர்பான அறிக்கையைப் பெற்று ஆலோசிக்கும் பொருட்டு 05 அங்கத்தவர்களைக் கொண்ட உபகுழு நியமிக்கப்பட்டது.

யாழ். மாநகரசபை ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் ஸ்தாபிக்கப்பட்டு நடாத்தப்பட்டு வந்த சிற்றுண்டிச் சாலையை பொறுப்பேற்று நடாத்துவதென 18.02.1990ஆம் திகதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

03.04.1951இல் ஸ்தாபிக்கப்பட்ட சங்கத்தின் 40ஆவது ஆண்டு விழா 03.04.1991ஆம் திகதி கொண்டாடப்பட்டதுடன் சுயவிருப்பத்தின் பேரில் இளைப்பாறிய அங்கத்தவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் மிக எளிய முறையில் இடம்பெற்றிருந்தது.

1990ஆம் ஆண்டில் சிற்றுண்டிச் சாலையிலிருந்து நிகர இலாபமாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 10 000 மக்கள் வங்கியில் நிலையான வைப்பில் இடப்பட்டது.

ஏறத்தாழ 20 வருடங்களுக்கு முன்பாக ஏற்பட்ட பணச்சோர்வுத் தொகையாகிய ரூபா 9063/ 38 ஐ பதிவழிப்பதென10.03.1991ஆம் திகதிய வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சங்கத்தின் வளர்ச்சியை உற்றுநோக்கும்போது அதன் இன்றைய உன்னத நிலைக்கு அடிக்கல் நாட்டுவது போன்றதொரு நிகழ்வு அமைப்பு விதி முழுமையாக மறுசீரமைக்கப்பட்டு 30.03.1994ஆம் திகதியவருடாந்தப் பொதுக்கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டமையாகும்.

சங்கத்தின் நிதிவளம் படிப்படியாக அதிகரித்து வந்ததினால் அங்கத்தவர்களின் நிதித்தேவையை ஈடுசெய்யும் விதத்தில் விசேட கடன் தொகையை ரூபா 10000 ஆக அதிகரிப்பதென 30.03.1994 இல் நடைபெற்ற விசேட பொதுக்கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டதுடன் இதனை உறுதிப்படுத்தும் விதத்தில் 06 - 04 - 1994 ஆம் திகதிய நிர்வாகசபைக் கூட்டத்தின் தீர்மானத்திற்கமைவாக ரூபா 100000 வங்கியில் நிலையான வைப்பிலிடப்பட்டமை ஒரு அரிய சாதனையாகவே அப்போது கருதப்பட்டது.

காலத்தின் தேவைக்கேற்றவாறு மீளமைக்கப்பட்டு பொதுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட புதிய அமைப்பு விதியின் பிரகாரம் 06..08.1994இல் நடைபெற்ற 30அவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் நடப்பாண்டு நிர்வாகிகள் தெரிவு முதன் முதலாக இரகசிய வாக்களிப்பு மூலம் நடாத்தப்பட்டமை அங்கத்தவர்களிடையே சங்கம் பற்றிய நல்லெண்ணத்தினை உருவாக்கியது.

ஆரம்ப காலத்தில் பண்டிகை முற்பணமாக வழங்கப்பட்டு வந்த ரூபா 100/= 1996ஆம் ஆண்டு ரூபா 1500ஆக அதிகரிக்கப்பட்டு பின்னர் 1999 ஆம் ஆண்டு தொடக்கம் ரூபா 2000 ஆக வழங்கப்பட்டு வருவதும் சங்கத்தின் நிதிவளம் மேம்பட்டு வருவதையே கோடிட்டுக் காட்டுகின்றது.

27.07.1996ஆம் திகதியன்று இடம் பெற்ற 31ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தல் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானங்கள் அனைத்து அங்கத்தவர்களாலும் பாராட்டப்பட்டதொன்று என்பதுடன் தற்போதும் அது நடைமுறைப்படத்தப்பட்டு வருவது அனைவருக்கும் மிகுந்த உற்சாகமூட்டுவதாகவே அமைந்துள்ளது.

"சங்கத்தின் துணைவிதி 5 -4 -2 இன் ஏற்பாட்டின் கீழ் வருடாந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கப்பெறும் பகிரக்கூடிய சுத்த இலாபத்தில் 10% வீதத்திற்கு மேற்படாத தொகையினை சேவையிலிருந்து இளைப்பாறிச் செல்லும் அங்கத்தவர்கள் அனைவருக்கும் ஒவ்வொரு வருட இறுதியிலும் அவர்களது அங்கத்துவக் காலத்தின் அடிப்படையில் ஆகக்கூடுதலாக ரூபா 300/= ஐ அன்பளிப்பாக வழங்கிக் கௌரவிப்பதெனவும் இச்சங்கம் ஏகமனதாகத் தீர்மானிப்பதுடன் ஒவ்வொரு வருட முடிவிலும் இளைப்பாறிச் செல்லும் அங்கத்தவர்களை அழைத்து அவ்வாண்டு பதவியிலிருக்கும் நிர்வாகசபை அங்கத்தவர்கள் மாத்திரம் கலந்துகொள்ளும் ஒரு எளிய வைபவத்திலேயே மேற்படி அன்பளிப்பை வழங்கவேண்டுமென இச்சங்கம் மேலும் தீர்மானிக்கிறது.

சங்கத்தின் நிதிவளம் பெருகி வந்ததினாலும் அங்கத்தவர்களின் நிதித் தேவையை இயன்றளவு வழங்கும் விதத்திலும் 1997ஆம் ஆண்டு முதல் விசேட கடன்தொகை ரூபா 12 000 ஆக அதிகரிக்கப்பட்டு இன்றுவரை அத்தொகையே வழங்கப்பட்டு வருகின்றது.

சிக்கன சங்கத்தின் வளர்ச்சிக்காக எம் அனைவருடனும் ஒன்றுபட்டு உழைத்து சங்கத்தின் பொருளாளர் பதவியை வகித்த திரு. பத்மநாதன் அவர்கள் சற்றும் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட குண்டுவெடிப்பில் சிக்கி அகாலமரணமானபோது அவரது அலவலக மேசையினுள் பாதுகாப்பாக வைக்கப்பட்டு இருந்த பெருந்தொகைப் பணம் பாதுகாப்பு பிரிவினரால் சூறையாடப்பட்டது அனைவரும் அறிந்த விடயமாகும்.

ஆரம்ப காலத்தில் ஒரு சிலரால் கையாடப்பட்ட சங்கத்தின் நிதியினை அவர்களிடமிருந்து அறவிடுவதற்குரிய நடவடிக்கையை அப்போதைய நிர்வாகிகள் துரிதகதியில் எடுக்கத் தவறியமையினால் காலப்போக்கில் அப்பணச் சோர்வு பொதுச் சைபயின் அங்கீகாரத்துடன் பதிவழிக்கப்பட்டது. இதுசங்க வளர்ச்சியில் பாரிய பின்னடைவை ஏற்படுத்திய சம்பவமாகும்.

1998ஆம் ஆண்டு சங்கத்தின் பொருளாளர் பதவியை வகித்துவந்த திரு.பத்மநாதன் அவர்கள் அகால மரணமானபோது அவரது பொறுப்பிலிருந்த சங்கத்தின் நிதியாகிய ரூபா11 067.60 அசாதாரண சூழ்நிலையில் நிகழ்ந்த இழப்பாதலால் அதனை நிச்சயமாக பொதுச்சபையின் அங்கீகாரத்துடன் பதிவழித்திருக்க முடியும். அவ்வாறில்லாத அமரர் பத்மநாதனின் வாரிசுக்களே அத்தொகையைச் செலுத்தி அவரது கௌரவத்தையும் தமது கௌரவத்தையும் காத்துக் கொண்டனர். இது என்றுமே நிகழ்ந்திருக்காத முன்மாதிரியானதொரு சம்பவமாகும். இதனால் சங்கம் மட்டுமல்ல அனைத்து அங்கத்தவர்களுமே பெருமையடைகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கனச் சங்கத்திற்கென நிரந்தரக் கட்டிடம் ஒன்றினை அமைக்கவேண்டும் என்ற நோக்கில் சகல அங்கத்தவர்களிடமிருந்தும் தலா 100/= வீதம் அறவிடவேண்டுமென 30.09.2000 ஆம் திகதிய 34ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தின் தீர்மானத்திற்கமைவாகவே கட்டிட நிதி முதன் முதலாக சேகரிக்கப்பட்டது.

தற்போது யாழ்ப்பாண மாநகரசபையின் முதல்வராக பதவிவகிக்கும் மாண்புமிகு நடராஜா இரவிராஜ் அவர்கள் சங்கத்தினால் நிர்வகிக்கப்படும் சிற்றுண்டிச் சாலையின் பாவனைக்காக புதியதொரு குளிர் சாதனப் பெட்டிக்கு ரூபா 10000/=யை அன்பளிப்பாக வழங்கியிருப்பது சங்கத்தின் நம்பிக்கைக்கும் நன்நடத்தைக்கும் அதன் வளர்ச்சிக்கும் கிடைத்த அளப்பரிய பரிசென்றே கொள்ளவேண்டும்.

சங்கத்தின் நிரந்தரக் கட்டிடத்தை அமைப்பதற்குத் தேவையான நிதியின் ஒரு பகுதியினை கௌரவ மாநகரசபை அங்கத்தவர்களும், மாண்புமிகு மாநகர முதல்வரும் வழங்கியிருப்பதன் மூலம் சிக்கன சங்கம் மாநகரசபையின் ஓர் அங்கம் என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இதற்கு மேலாக சங்கத்தின் அலுவலகக் கட்டிட வேலையைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான நிதியின் ஒரு பகுதியினை அதாவது ரூ.200,000/=ஐ வடக்கின் புனர்வாழ்வு புனரமைப்புகு மற்றும் வடக்கு கிழக்கு தமிழ்மொழி இந்து கலாசார அமைச்சு வழங்குவதாக உறுதியளித்து தற்போது 100,000/= ரூபாவை முதற்கட்டமாக வழங்கி கட்டிட வேலையைத் துரிதப்படுத்தியிருப்பது அனைத்து அங்கத்தவர்களாலுமே விதந்து போற்றுதற்குரிய நிகழ்வாகும். மீதிப்பணமும் கௌரவ அமைச்சரினால் வழங்கப்படுமிடத்து கட்டிட வேலையை முழுமையாகப் பூர்த்தி செய்து சங்கம் திறம்பட இயங்குவது திண்மம்.

கடந்த காலங்களில் நிலவிய யுத்த சூழ்நிலையினால் அடிக்கடி இடமாறி தனியார் வீடுகளிலும், சிற்றுண்டிசாலைக் கட்டிடத்திலும் இடப்பெயர்வின்போது சாவகச்சேரி நீதிமன்றக் கட்டிடத்திலும் இயங்கிய சிக்கன சங்கம் தற்போது தனக்கென நிலையானதொரு கட்டிடத்தினைப் பெற்றிருப்பது அதன் வளர்ச்சிப் பாதையில் ஒரு மைற்கல்லாகும்.

பாலைவனம் போன்றதொரு சூழலிலே பயணம் செய்து வந்த சிக்கனச் சங்கமானது தற்போது பசுமையானதொரு சோலையிலே காலடி எடுத்து வைக்கின்றது. இந்நிலைமையை அது தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வீறுநடைபோடும் காலம் வெகுதூரத்திலில்லை எனத் துணிந்து கூறலாம்.

**(இரா. இரத்தினசிங்கம்)**

**முன்நாள் செயலாளரும், பொருளாளரும்**

**யாழ்.மா.ஊ.சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் மறக்குமா ...

மனிதன் பிறப்பது, வாழ்வது இறப்பது இயற்கையின் நியதி. இவர்களின் உடல் அழியினும் புகழ் அழியாத மேதைகளாய் வருவது ஒரு சிலர். அவர்களுள் யா. மா. சபை ஊழியர் சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்கத்தில் தனக்கென ஓர் தடம் பதித்து சங்க வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டவர் அமரர் திரு சு. பத்மநாதன் அவர்களாவார்.

அமரர் பத்மநாதன் பற்றி எழுத எனக்கு தகுதியும் அனுபவமும் இல்லை ஆயினும் யாழ் மாநகர சபை ஊழியர் சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்கத்தின் தற்போதைய செயலாளர் என்ற ரீதியில் அமரர் பற்றியும் அவரது அர்ப்பணிப்புள்ள சேவைபற்றியும் குறிப்பிடுவது எனது கடமையும் பொறுப்புமாக அமைகின்றது.

அமர் திரு சு.பத்மநாதன் அவர்கள் அன்பின் உருவமானவர், குள்ளமான உடலாயினும் கள்ளமில்லா உள்ளம் ஆடம்பரமற்ற எளிமையான நடை உடை பாவனை உடையவர். அவரது கனிவான பேச்சு சங்க அங்கத்தவர்களை அவர்பால் கவர்ந்தது. அடக்கம் அவரது அணிகலன் அன்பு அவரது உயிர் மூச்சு ஆகும்.

மறைந்தும் மறவாத அமரர் சு.பத்மநாதன் அவர்கள் யாழ் மாநகரசபையில் நிர்வாக உத்தியோகத்தராக, பதில் ஆணையாளராக பணியாற்றியதோடு அல்லாமல் ஊழியர் சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்கத்திலும் செயலாளராகவும், பொருளாளராகவும் இருந்து சங்க அங்கத்தவர்கட்கு பல வழிகளிலும் சேவை செய்து சங்க வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டவராவார்.

"பெருமையுடையவர் ஆற்றுவர் ஆற்றின்
அருமை உடைய செயல்"

எனும் வள்ளுவரின் வாய் மொழிக்கு இணங்க பெருமைப் பண்புடையவர்களால் தான் சிறந்த பொதுச் சேவையை ஆற்ற முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் அமரர்.சு.பத்மநாதன் அவர்களாவார்.

சங்க செயற்குழுவிற்கு கைலாகு கொடுப்பது கடமையே கண் என கொள்வது ஓய்வு நேரத்தில் ஆலய தரிசனத்திலும் ஆலய திருத்தொண்டிலும் ஈடுபடுவது அமரரின் சிறப்பியல்புகளாகும்.

இவர் கடமை கண்ணியம் கட்டுப்பாடு மட்டுமன்றி சங்க அங்கத்தவர்களிற்கு, சங்க செயற்பாடுகளிற்கு நல்லாசானாகவும் திகழ்ந்தார். இவர் இருதய நோய், ஆஸ்துமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய்கட்கு உட்பட்டிருந்த போதிலும் பனியோ மழையோ வெய்யிலோ ஒரு பொருட்டல்லாது கடமையில் காணகூடியதாக இருக்கும். சங்க அங்கத்தவர்களிடமும் யாழ் மாநகரசபை சிற்றூழியர்களின் நலனிலும் அதிக அக்கறையுடையவராக இருந்தார். ஆயினும் இவரது சக்திக்கு அப்பாற் பட்ட வேலைப்பழு காரணமாக சற்று ... பின்னடைவு ஏற்படுவதும் உண்டு. எப்பிரச்சினைகளாயினும் சுமுகமாக அணுகி நேருக்கு நேர் பேசி தீர்க்கும் சாதுரியம் படைத்தவர். இவர் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் காலாண்டு காலத்திற்கு மேல் யாழ் மாநகரசபையில் கழித்தவராவர். சங்க வளர்ச்சியில் அரும்பாடு பட்டு பெரும் பங்காற்றியவர்களுள் இவரும் ஒருவராவர்.

1995ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து மக்கள் தென்மராட்சிக்கு புலம் பெயர்வின் போதும் கூட சங்க ஆவணங்களை தனது கண்மணி போல் பாதுகாத்து மீள கொணர்ந்து கையளித்த பெருந்தகையாளன் ஆவர். தனது சொந்த உடமைகளின் மீது கொண்ட பற்றுதலிலும் பார்க்க யாழ் மாநகர சபை ஊழியர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க ஆவணங்கள் சபையின் ஆவணங்கள் மீது கொண்ட பற்றுதல் அளவிடற்கரியது. இக்காலப் பகுதியில் பசிநோக்காது கண்துஞ்சாது கருமமே கண்ணாயினவர் அலுவலகபணி நுட்பங்களை தனது பட்டறவின் ஊடே கற்று கொண்டு சேவை செய்த மகானை இன்று நினைவு கூர்வதில் சங்க அங்கத்தவர்கள் செயற்குழு உறுப்பினர்கள் யாவரும் உவகையுறுவோமாக.

**மு. சிவசண்முகராசா,**

**செயலாளர்,**

**யா.மா.உ.சி.க.உ.கூ. சங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்ச்சிப் பாதையில் ...

யாழ் மாநகர சபை ஊழியர் சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கத்தின் 50ஆவது அகவை கொண்டாடுகையில் பொன் விழா மலரும் வெளிவரும் இவ் வேளையில் இம் மலரை கண்ட யாழ் மாநகரசபையில் பணியாற்றுகின்ற பணியாற்றிய பணியாளர்கள் சங்க அங்கத்தவர்கள் யாவரும் சேர்ந்து அக மகிழ்ந்து களிப்படைகின்றனர். பெருமை மிக்க இச் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் செ.கு.உ. இருக்க கிடைத்த வாய்ப்பை இட்டு பேருவகை அடைகின்றேன்.

ஒரு சங்கத்தின் அரைநூற்றாண்டு கால சம்பவங்கள், அதனுடைய செயற்பாடுகள் வளர்ச்சி, பரிமாணம் போன்ற அம்சங்கள் யாவற்றையும் பதிவுகளாக ஒரு பக்கத்தினுள்ளே அடக்கப்பட முடியாது. ஆயினும் தற்போதைய சூழலில் சூழ்நிலையில் "இன்றிருப்பார் நாளை இல்லை" ஆனால் கூட்டுறவு சங்கம் ஒன்றினுடைய வாழ்நாள் தொடர்ச்சியானது அது பெறுகின்ற கனதி தனிமனித சமுதாய முயற்சிகள் ஒவ்வொருன்றினதும் கூட்டுறவால் தொடர்ந்து கட்டி எழுப்பப்படுவது ஆகும்.

அரை நூற்றாண்டு காலம் என்பது ஒரு குறுகிய காலமல்ல. இக்கால வரலாறுகள் புரட்டிப்பார்ப்பாக்கப்பட வேண்டிய ஒன்று. இக்கால கட்டங்களில் நகர மண்டபதாக்குதலுக்குப் பின் பலரின் வீடுகளில் அறை வாடகைக்கு எடுத்துப் பாவிக்க நேரிட்ட போது அங்கத்தவர்களிற்கு ஏற்பட்ட சில இடர்பாடுகளை நீக்குமுகமாக ஸ்ரான்லி வீதி மணியம் கட்டிடத்திற்கு அருகாமையில் இல, 276இன் முன்பகுதியிலும் பின் இந்து விடுதி இல. 13, 14 பண்டாரமாளி கைவளவிலும் இயங்கி வருகையில் ஏற்பட்ட அனர்த்தத்தின் பின்னர் யாழ் மாநகரசபை சித்த மருத்துவப் பகுதியின் ஒரு பகுதியிலுமாக இயங்கி வந்த சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்கமானது இன்று 50ஆவது அகவை கொண்டாடுகையில் தனக்கென ஓர் நிலையான நிரந்தர இடத்தில் வேர் ஊன்றி உள்ளது என்றால் மிகையாகாது. இதற்கு காரண கர்த்தாக்களாக முன்னைநாள் யாழ் மாநகர ஆணையாளர் திரு வே.பொ.பாலசிங்கம் அவர்களினதும் சங்க தலைவர் திரு. இ.க. இராஜேஸ்வரன் அவர்களினதும் விடாமுயற்சியும் கடின உழைப்பும் எமது செயற்குழுவை ஓர் இலட்சியத்துடன் பிரயாசப்பட்டு செயற்பட வழிவகுத்தது.

இச் சங்க வளர்ச்சியில் கோடை இருந்தது மாரி இருந்தது, இளம் தென்றல் இருந்தது. இதையும் மீறி சளைக்காத மனோதிடம் கொண்ட எமது செயற்குழுவின் செயற்பாடுகளாலும் சங்க அங்கத்தவர்கள், நலன் விரும்பிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசுவாசிகள் என்ற கூட்டுறவால் 50ஆவது அகவைகண்டு வளமுடன் நிமிர்ந்து தன்னிகரில்லா சுடரென ஒளிவீசுகிறது. யாழ் மாநகரசபை ஊழியர் சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கம்

மேற்படி சங்கம் கூட்டுறவு, சேமிப்பு, சேமிப்பிலிருந்து 90% இடர் கடன், விஷேட கடன், சகாய நிதி, பண்டிகை முற்பணம் என அங்கத்தவர்களிற்கு அவர்களின் தேவை சங்கயாப்பு விதிக்கமைய கூட்டுறவாளர்களின் வழிநடத்தலிலும் அங்கத்தவர்களின் தேவையை மேம்படுத்தி செயற்படுத்துவதும் இக் கணக்குகளை வருடாவருடம் கூட்டுறவாளர்களின் ஊடாக கணக்காய்வினை மேற்கொண்டு அவ் இலாபத்தினை அங்கத்தவர்களின் பிள்ளைகளின் கல்விக்கு பகிர்ந்தளிப்பதும் சித்திரை மாதத்தில் வருடாந்த சேமிப்பிற்கான வட்டியை வழங்குவதும் சிற்றுண்டிசாலையில் நியாய விலையில் சிற்றுண்டி வகைகளை நுகர்வோரிற்கு வழங்குதல் போன்ற சேவைகளை சிறப்புடன் ஆற்றி இன்று இமயமென உயர்ந்து நிற்கும் யாழ் மாநகர சபை ஊழியர் சிக்கனக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம் இன்னும் பல்லாண்டு பல்லாண்டு நீடித்து நிலைக்க எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி இதயம் பூரிப்படைவோமாக.

**க.மேகனரூபன்**

**செ.கு.உ.**

**யா. மா.சபை ஊ.சி.க.கூ. சங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொன்விழா மலர் குழுவினர்



யா.மா.ச.ஊ.சி.க.கூ.சங்க பணியாளருடன் தலைவர், செயலாளர், பொருளாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரையறுத்த யாழ் மாநகரசபை ஊழியர் சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கமும் அங்கத்தவர்களின் நலன்களும்.

## 1 கூட்டுறவு

மக்கள் தமது பொருளாதார கலை கலாச்சார வளர்ச்சி கருதி சம உரிமையும் கடமையும் என்ற அடிப்படையில் தாமகவே முன்வந்து ஒன்று சேருதல் கூட்டுறவு எனவும், இத்தத்துவம் பிரகாரம் உருவாக்கப்படுகின்ற தொழில் நிறுவனங்கள் கூட்டுறவுத் துறை தொழில்நிறுவனங்கள் எனப்படுகிறது. இவை சேவை நோக்கம் கொண்டவையாகக் காணப்படுகின்றது. பதிவாளரிடம் இது பதிவு செய்யப்பட வேண்டும்.

இங்கிலாந்தில் 1944ஆம் ஆண்டு இலங்கையில் 1911ஆம் ஆண்டும் சட்ட ரீதியாக முதலில் நடைமுறைக்கு வந்தது.

## 2. கூட்டுறவின் தோற்றம்

1844ஆம் அண்டு இங்கிலாந்தில் ரோச்டேல் நகரில் 28 நெசவுத் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து தலா ஒரு பவுண்ஸ் அங்கத்துவப் பணமாகச் சேர்த்து நட்பறவுச் சட்டத்தின் கீழ் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்தினை தமக்குத் தேவையான அத்தியவசியப் பொருட்களைப் பெறும் நோக்கோடு உருவாக்கினர். இதுவே சட்டரீதியாக உலகில் உருவாக்கப்பட்ட கூட்டுறவு அமைப்பாகும். இதன் பிரதான நோக்கம் தொழிலாளர்களின் வாழ்க்கைச் செலவினை இழிவு படுத்துவதும் தரமான பொருட்களை தேவையான காலத்தில் வழங்கி அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாகும். கடந்த கால அனுபவங்களைக் கருத்திற் கொண்டு விதிகளை உருவாக்கினர். இதனால் வெற்றி கண்ட கூட்டுறவு அமைப்பு ஏனைய உலக நாடுகளுக்கும் பரவலாயிற்று.

## 3. இலங்கையில் கூட்டுறவு

1904ஆம் ஆண்டு அரசினால் வழங்குகின்ற கடன்களை விவசாயிகளுக்கு சிபார்சு செய்து வழங்குவதற்காக சமூக ரீதியாக கடனுதவி சங்கங்கள் உருவாக்கப்பட்டது. மக்களுடைய ஈடுபாடு அதிகரிக்கவே 1911ஆம் ஆண்டு 7ஆம் இலக்க ஐக்கிய நாணயசட்டத்தின் பிரகாரம் ஐக்கிய நாணய சங்கங்கள் உருவாக்கப்பட்டது. இதன் பிரதான நோக்கம் அங்கத்தவர்களிடையே சிக்கன சேமிப்புப் பண்புகளை வளர்த்தலும் குறைந்த வட்டி, குறுங்காலத்தில் வழங்குவதையுமே நோக்கமாகக் கொண்டது. பின்னர் நாட்டின் தேவைக்ஃகேற்ப பல்வேறு கூட்டுறவு அமைப்பு உருவாக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. கூட்டுறவு நிறுவனங்களின் பண்புகள்

1. சங்கத்தின் பரப்பெல்லையில் வசிக்கின்ற தொழில் புரிகின்ற 18 வயதுக்கு குறையாதவர்கள் சங்க உப விதிக்கு அமைவாக அங்கத்துவம் பெறலாம். தற்போது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்துவப் பணமாக 100/- காணப்படுகின்றது.

## 5. சர்வதேச கூட்டுறவுக் கொள்கைகள்

இங்கிலாந்தில் 1844இல் சட்ட ரீதியாக உருவாக்கப்பட்ட கூட்டுறவு உலக நாடுகளுக்கு பரவி வளர்ச்சியடைய ஆரம்பித்தது. இந்நிலையில் உலகில் கூட்டுறவு எல்லா நாடுகளிலும் ஒரே மாதிரியான அடிப்படைக் கொள்கைகளைக் கொண்டு அமைய வேண்டும் என்பதற்காக கூட்டுறவு தொடர்பான பொதுவான கொள்கைகளைக் காலத்துக்குக் காலம் ஏற்படுத்துவதற்காக 1895இல் றோச்டேல் முன்னோடிகள் வகுத்த கொள்கைகளைஅப்படியே கடைபிடித்தது. பின்னர் சூழ்நிலை மாற்றத்துக்கு ஏற்ப சர்வதேச கூட்டுறவுக் கொள்கைகளைப் பிரகடனப் படுத்தி வந்தது. அதன் தொடர்சியாக தற்போது நடைமுறையில் உள்ள பின்வரும் சர்வதேசக் கூட்டுறவுக் கொள்கைகள் மன்செஸ்ரர்நகரில் நடைபெற்ற சர்வதேச கூட்டுறவு அமைப்பின் மகாநாட்டில் பிரகடனப்படுத்தப்பட்டன.

### 1. தன்விருப்பார்ந்த தடையற்ற அங்கத்துவம்

கூட்டுறவு அமைப்புக்களில் எதுவித நிர்ப்பந்தமும் இன்றி நன்மைகளை வளர்த்து தாமே சேரவுள்ள உரிமையையும், இன, மத, மொழி, நிற வேறுபாடுகள் இன்றி சேர்வதற்கும் விலகுவதற்கும் உள்ள உரிமையைக் குறிக்கும்.

### 2. ஜனநாயக முறையில் அமைந்த கட்டுபாடும் நிர்வாகமும்

எத்தனை பங்குகள் வைத்திருந்தாலும் வாக்குரிமை ஒன்று. இவ்வாக்குகளை அங்கத்தவர்கள் பிரயோகித்து ஜனநாயக முறையில் மேற்கொள்ளப்பட்ட தெரிவின் அடிப்படையில் அமைந்த இயக்குனர் சபையின் அடிப்படையிலேயே கூட்டுறவு அமைப்புக்கள் நிர்வகிக்கப்பட வேண்டும் என்பதைக் குறிக்கின்ற கொள்கையாகும்.

### 3. அங்கத்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்பு

அங்கத்தவர்களின் பங்கு மூலதனத்துக்கு குறைந்த வீத வட்டி வழங்கப்பட வேண்டும் என்பதையும், மேலதிகம் கூட்டுறவு அமைப்பை மேலும் மேம்படுத்தவும், அங்கத்தவர்களின் வியாபார பங்களிப்புக்கு ஏற்ப அவர்களின் நலன்களைப் பேணவும், அங்கத்தவர்களின் அனுமதியுடன் மேலதிக தேவைகளுக்கு பயன்படுத்த முடியும் என்பதனை விளக்குகின்ற கொள்கையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. சுதந்திரமாகவும், சுயமாகவும் தொழிற்படல்**

இப் புதிய கொள்கை ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் சுதந்திரமாகவும் சுயமாகவும் தொழிற்பட வேண்டும் என்ற கருத்தையே வலியுறுத்துகின்றது.

**5. கல்வி, பயிற்சி, தகவல்**

கூட்டுறவு சங்கங்கள் தங்கள் அங்கத்தவர்கள், இயக்குனர், முகாமையாளர்கள் மற்றும் ஏனைய பணியாளர்களுக்குக் கூட்டுறவு சம்பந்தமான கல்வியை மட்டுமல்ல இவ் அமைப்புக்களை முறையாக இயக்குவதற்கான பயிற்சி வழங்குதலையும் உறுதிப்படுத்த வேண்டும்.

**6. கூட்டுறவுச் சங்கங்களிடையே ஒத்துழைப்பு**

கூட்டுறவுச் சங்கங்கள் தமக்கிடையே பிரதேச ரீதியாக, சர்வதேச ரீதியாக உறவினை ஏற்படுத்த வேண்டும் என்பதனை விளக்குகின்ற கொள்கையே இதுவாகும். இதனால் கூட்டுறவு அமைப்பு நோக்கத்தினை இலகுவாகவும், விரைவாகவும் அடையக்கூடியதாக இருக்கும்.

**7. சமூக மேம்பாடு**

இங்கிலாந்தில் தோன்றிய இவ்வியக்கம் படிப்படியாக உலக நாடுகள் பலவற்றிலும் இவ் அமைப்பு பல்கிப் பெருக அடிக்கல்லாக அமைந்தன. 1844 இல் முதலாவது கூட்டுறவு சங்கம் உலகில் ஆரம்பமானது. இது நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கமாகும். இது இங்கிலாந்து நட்புறவு கடன்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. 1852இல் முதலாவது சட்டம் இங்கிலாந்தில் உருவானது. இதுவே உலகின் முதலாவது சட்டமாகும். 1844இல் ஜேர்மனியிலும் ஒரு சங்கம் உருவானது. இது கடன் வழங்கல் கூட்டுறவு அமைப்பு ஆகும். 1862இல் அமெரிக்காவில் கூட்டுறவு அமைப்பு உருவானது. 1904இல் இந்தியாவில் கூட்டுறவுச் சட்டம் உருவாகி கூட்டுறவு கொள்கை அறிமுகமானது. இவ்வாறாக நாடுகளிடையே கூட்டுறவு கொள்கை அறிமுகமானது. இவ்வாறாக நாடுகளிடையே கூட்டுறவு வளர்ச்சியடையத் தொடங்கியது.

## 5. கூட்டுறவின் வகைகள்

கூட்டுறவை நோக்கம், தொழிற்பாடு, சட்டம் ஆகிய பல அடிப்படைகளில் வகுத்து நோக்கலாம். தொழிற்பாட்டின் அடிப்படையில் பொதுவாக பின்வருமாறு வகுக்கலாம்.

1. ஐக்கிய நாணய சங்கங்கள், சிக்கனக் கடனுதவி சங்கங்கள்
2. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள்
4. தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள்
5. ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள்

## 6. சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்கங்கள்

அங்கத்தவர்களிடையே சிக்கன சேமிப்புப் பண்புகளை வளர்ப்பதற்கும் குறைந்த வட்டியில் குறைந்த நிபர்ந்தனையில் இலகுவாகவும், விரைவாகவும் கடன் வழங்குவதற்கும், இதனூடாக அங்கத்தவர்களின் சமூக பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காகவும் உருவாக்கப்படுவதே சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கமாகும். இது கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் கூட்டுறவு ஆணையாளரின் கீழ் பதிவு செய்யப்படுகின்றது. இதனை கூட்டுறவுச் சட்டம், சங்கத்தின் உபவிதியும் கட்டுப்படுத்துகின்றது. கூட்டுறவுத் திணைக்களம் மேற்பார்வையும், ஆலோசனையும் வழங்குகின்றது. இதன் நிர்வாகத்திற்கு அங்கத்தவர்கள் மத்தியில் இருந்து ஆண்டுப் பொதுக்4ட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட இயக்குனர் சபையே கூட்டுறவு திணைக்களத்தால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும். இவற்றின் செயற்பாடுகள் கூட்டுறவுக் கொள்கைக்கு அமைவானதாக இருக்க வேண்டும். இது அங்கத்தவர்களுடையது. அத்துடன் கூட்டுறவு நிறுவனமுமாகும்.

## 7. யாழ் மாநகரசபை சிக்கனக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம்

3.4.1951இல் பதிவாளர் J/ 1079 இன் கீழ் கூட்டுறவுச் சங்கத்துக்கமைவாக உருவாக்கப்பட்டது. இதன் பிரதான நோக்கம். இதில் 18 வயதுக்க குறையாதவர்கள், நன்னடத்தையுள்ள நிரந்தரப் பணியாளரே அங்கத்துவம் பெற முடியும். இதன் நிதியாண்டு 1.1. தொடக்கம் 31.12 .. வரையிலானதாகும்.

இதற்கான மூலதனம் பின்வரும் வழிகளில் திரட்டிக் கொள்ள முடியும் .

## 8. வரையறுத்த யாழ் மாநகர சபை சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தினால் அங்கத்தவர்கள் பெறும் நன்மைகள்:-

1. காலத்துக்கேற்ப புதிய வைப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துவதால் சிக்கன சேமிப்புப் பண்புகள் வளர்கின்றது. இது அவர்களின் வாழ்க்கை தர உயர்வுக்கும் சமூக அபிவிருத்திக்கும் அடிப்படையாகின்றது.
2. மாநகர சபை ஊழியர்கள் கூட்டுறவுத் தத்துவத்தின் அடிப்படையில் ஒன்று சேர்வதால் ஊழியர்களுக்கிடையில் ஒரு சுமுக உறவு, புரிந்துணர்வு, சகோதரத்துவம், சமத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய ஏற்படுகின்றது. இது உளவியல் ரீதியாக ஊழியர்களை தூண்டுகிறது.

3. பொதுக்கூட்டம் கூட்டுதல் இயக்குனர்கள் தெரிவு, இயக்குனராக செயற்படல் ஆகிய செயற்பாடுகள் சமூகத்தலைமைத்துவத்தை வளர்க்க உதவுகிறது. எதிர்காலத்தில் உள்ளூராட்சி மன்றம், பிரதேச சபைகள், மாகாண சபைகள் பாராளுமன்றம் போன்றவற்றிலும் பிரதிநிதித்துவம் பெறுவதற்கான களப்பயிற்சியை அளிக்கின்றது.

4. தொழிலாளர்கள் எதிர்பார்ப்பது போல வருமானங்களை உயர்த்த முடியாது. ஆனால் செலவுகளை சிக்கனப்படுத்தி சேமிப்பை உயர்த்தி வாழ்க்கைத் தரத்தை உயர்த்தலாம். இக்கூட்டுறவு சிக்கனப்பண்புகளை வளர்க்கிறது.

5. தொழிலாளர்கள் தனக்காகவும் பிறருக்காகவும் வாழ்கின்ற பண்பை வளர்க்கிறது. இதனால் ஒருவருடைய இழப்பில் அல்லது துன்பத்தில் பொருளாதார ரீதியாக பங்களிப்பு செய்ய உதவுகிறது.

6. தொழிலாளர்கள் தமக்கு தேவையான நலன் பெறவும் பாதுகாக்கவும் உதவுகிறது. இதன் விளைவே சிற்றுண்டிச் சாலை, பொழுதுபோக்கு வசதி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

7. அங்கத்தவர்கள் குறைந்த வட்டியில் குறைந்த நிபந்தனையில் விரைவாகவும், இலகுவாகவும் கடன்பெறக்கூடியதாக இருக்கின்றது. இதன் அடிப்படையில் இக்கூட்டுறவு அமைப்பு விசேட கடன், இடர் கடன், சேமிப்புக் கடன், வாகனக்கடன் போன்ற கடன்களை அங்கத்தவர்களுக்கு வழங்குகின்றது.

8. அங்கத்தவர்கள் மட்டுமல்ல அவர்களது பிள்ளைகளுக்கும் குடும்பத்தருக்கும், சில வசதிகளை அளிக்கின்றது. அந்த வகையில் அங்கத்தவர்களின் பிள்ளைகளின் கல்வி அபிவிருத்திக்காக இலாபத்தில் 10% வீதத்தினை ஒதுக்கி பயன்படுத்துகிறது.

9. அங்கத்தவர்கள் என்றும், தொழிலாளர்கள் என்றும் கூறும்போது அவர்களது பலம் அதிகரிக்கிறது. இதனால் பிணக்குகள் ஏற்படாததுடன் ஏற்படுகின்ற பிணக்குகளையும் இலகுவாகத் தீர்த்துக் கொள்ளலாம்.

வரையறுத்த யாழ் மாநகரசபை சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் பல வருடமாக கூட்டுறவுத் தத்துவத்துக்கு அமைவாக அரசியல் கலப்பின்றி அங்கத்தவர்களுக்கு அதிக சேவையளித்து அவர்களது சமூக பொருளாதார அபிவிருத்திக்கு அடிப்படையாக இருக்கின்றது என்பது எவராலும் மறுக்க முடியாது. இன்று உயர்ந்து நிற்கின்ற புதிய சொந்தக் கட்டிடமே இதற்குச் சாட்சியாக அமைகிறது.

**இ. ரட்ணம்** B.Com (Hons), M.Phil

**சிரேஷ்ட விரிவுரையாளர்**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமைத்துவம்
# Leadership

நிறுவனமொன்றின் ஊழியர்களை நெறிப்படுத்துவதில் முக்கிய பங்குபெறும் ஒரு கருமமே தலைமைத்துவம் எனப்படுகின்றது. ஒரு கருமத்தை ஒருவர் எவ்வாறு ஆற்ற விரும்புகின்றாரோ அதேபோல் ஏனையோரையும் தொழிற்பட வைக்கும் ஒரு கருமமே என இது வரைவிலக்கணப்படுத்தப்படும். எப்பொழுதுமே தலைவன் தனக்குக் கீழ் இருக்கும் உதவியாளர்களை அல்லது பின்பற்றுவோரைத்தான் விரும்பியவாறு தொழிற்பட வைப்பான். இதனையே நேர்க்கணிய செல்வாக்கு என்பார். இது மறுபுறத்தில் எதிர்க்கணிய செல்வாக்காக மாறிவிடக்கூடாது.

எப்பொழுதுமே தலைவன் ஏனையோரைவிட கூடிய வலுவினைக் கொண்டிருத்தல் வேண்டும். இதன் ஊடாக அவன் ஏனையோர் மீது செல்வாக்குச் செலுத்தும் நிலை உருவாகும். இதன் ஊடாக உதவியாளர் மீது செல்வாக்குச் செலுத்தும் நிலை தலைவனுக்கு உருவாகும். இது பின்வருமாறு,

**POWER**

↓

**INFLUENCE**

↓

**CHANGES IN BEHAVIOUR**

இதனால் தலைவனின் பணி உதவியாளர் மீது செல்வாக்குச் செலுத்தி அவர்களது நடத்தைகளை நிறுவனத்துக்குச் சாதகமாக மாற்றி விடுவதற்குக் காரணமாக அமைகின்றது. எனவேதான் ஏனையவர்களுடைய ஒத்துழைப்பைப் பெற்று நிறுவனத்தின் நோக்கத்தை அடைந்து கொள்வது தலைமைத்துவத்தில் சாதகமானதாக அமைகின்றதெனலாம்.

முகாமைத்துவத்தில் காணப்படும் தலைமைத்துவமானது நான்கு முறைகளில் உருவானதாகக் கருதப்படுகின்றது.

1. பிறப்பினாலான தலைமைத்துவம்
2. பாரம்பரியத் தலைமைத்துவம்
3. தெரிவுத் தலைமைத்துவம்
4. நியமனத் தலைமைத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.2 தலைமைத்துவத்தின் பண்புகள்

### Leadership Traits

1. மனித நடத்தையினை விளங்கிக் கொள்ளும் ஆற்றல், மற்றையோர் நிலைக்குள்ளாகும் பண்பினைக் கொண்டிருத்தல். (Empathy)
2. தொழில்நுட்பத்திறனைக் கொண்டிருத்தல். இது வேலை தொடர்பான பூரண அறிவினைக் கொண்டிருத்தல்.
3. நோக்க உணர்வுடன் தொழிற்படுதல். குறிப்பாக நிறுவனத்தின் இலக்கை அடைவதில் அக்கறை காட்டுதல்.
4. சிறந்த தொடர்பாடல் திறனைக் கொண்டிருத்தல். பொருத்தமான நேரத்தில் தேவையான தகவலை வழங்குதல்.
5. பேச்சாற்றல் கொண்டவராக இருத்தல் வேண்டும். எப்பொழுதும் ஊழியர்களைக் கவர்ந்து தான் விரும்பியபடி இயங்க வைக்க முடியும்.
6. பக்கச்சார்பில்லாத நடுநிலைமையாளராக இருத்தல்.
7. விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளும் மனநிலையைக் கொண்டிருத்தல்.
8. தேவைப்படும் தீர்மானங்களை எடுக்கும் ஆற்றல் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
9. பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருத்தல் வேண்டும்.
10. சிறந்த தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடிய ஆற்றல்.
11. ஆபத்துக்களை ஏற்கும் ஆற்றல் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
12. உதவியாளர்களது செயற்றிறனை மதிப்பிட்டுப் பொருத்தமான பதவி உயர்வினை அல்லது பயிற்சியினை வழங்கி நடவடிக்கை எடுத்தல்.
13. முரண்பாட்டை முகாமை செய்யும் ஆற்றல் கொண்டவராக இருத்தல்.
14. ஊழியர்களை ஊக்கப்படுத்தும் தன்மை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

## தலைமைத்துவத்தின் இயல்புகள்.

தலைவன் கொண்டிருக்கும் அதிகாரங்களையும் உதவியாளர்கள் கொண்டிருக்கும் சுதந்திரங்களையும் மையமாகக் கொண்டதே தலைமைத்துவ இயல்பாகும். எப்பொழுதும் தலைவன் வேறுபட்ட தலைமைத்துவ இயல்புகளைப் பயன்படுத்த விரும்புவதனால் ஒவ்வொரு கட்டத்திலும் அதிகாரங்களும் சுதந்திரங்களும் வேறுபட்டே இருக்கும். அடிப்படையில் தலைமைத்துவ இயல்புகளை இரு பிரிவுக்குள் கொண்டுவரலாம்.

1. அதிகார மயப்படுத்தப்பட்ட தலைமைத்துவம்
2. ஜனநாயகத் தலைமைத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகார மயப்படுத்தப்பட்ட தலைமைத்துவத்தில் தலைவன் பெருமளவு அதிகாரங்களை வைத்துக் கொண்டு உற்பத்தியாளர்களுக்கு மிகக் குறைந்த சுதந்திரங்களை வழங்கியிருப்பான். தீர்மானம் எடுத்து அதனை நடைமுறைப்படுத்துமாறு கட்டளையிடுவதே தலைவன் பொறுப்பாகும். ஆனால் ஜனநாயகத் தலைமைத்துவத்தில் பெருமளவு சுதந்திரங்களை உதவியாளர்கள் பெற்றுக் கொள்வதுடன் தலைவன் மிகக் குறைந்த அதிகாரங்களையே கொண்டிருப்பான். இங்கு உதவியாளர்களின் ஆலோசனை பெறப்பட்ட பின்பே தீர்மானங்கள் எடுக்கப்படும். இதன் அடிப்படையில் பல்வேறுபட்ட இயல்புகள் நடைமுறைக்கு வந்துள்ளன.

## DOUGLAS MC GREGOR

இவர் தலைமைத்துவத்தின் இயல்பு தொடர்பாக இரு கோட்பாடுகளை முன்வைத்தார். ஊழியர் நடத்தையினை அடிப்படையாகக் கொண்டு,

1. கொள்கை X - Theory X
2. கொள்கை Y - Theory Y

என இக்கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டன. கொள்கை X என்பது பழையகாலக் கோட்பாடாகும். இது தலைவன் அதிக அதிகாரத்தை வைத்துக் கொள்ள வேண்டுமென்றே அடிப்படையாகக் கொண்டிருக்கும். ஊழியர்கள் போதுமான ஒத்துழைப்பை வழங்க முன்வராத போது இக்கோட்பாடு பின்பற்றப்படும். இதன்படி,

1. ஊழியர் வேலை செய்வதற்கு விருப்பம் கொண்டிருப்பதில்லை.
2. பொறுப்புக்களை தட்டிக்கழிக்க என்றுமே விரும்புவர்.
3. நோக்கங்களை அடைவதில் விருப்பம் இல்லை.
4. நெருங்கி மேற்பார்வை அவசியம்.
5. கடுமையான அணுகுதலே அவர்களைத் தூண்டும்.

என்ற அடிப்படையில் தலைவன் அதிகார மயப்படுத்தப்பட்ட தலைமைத்துவத்தை கொண்டிருக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

கொள்கை Y என்பது நவீனகாலக் கொள்கை எனக் கருதப்படுகின்றது. இக்கொள்கையின்படி உதவியாளர்கள் தலைவனுடன் பூரண ஒத்துழைப்பைக் கொண்டிருப்பர். இதன் காரணமாக தலைவன் கூடிய சுதந்திரத்தை உதவியாளர்களுக்கு வழங்கி தனது அதிகாரத்தை குறைத்துக் கொள்வர். இதன்படி ஊழியர் பின்வரும் பண்பைக் கொண்டிருப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. வேலை செய்வதற்கு விருப்பைக் கொண்டிருப்பதுடன் அதன் மூலம் திருப்தியையும் காண்பார்.
2. பொறுப்புக்களை ஏற்பதற்கு முன்வருதல்.
3. நோக்கங்களை அடைவதில் அதிக அக்கறை காட்டுதல்.
4. மேற்பார்வை என்பது அவசியமில்லை.
5. தட்டிக் கொடுத்து வேலை வாங்குவதே தலைவன் பாவிக்கக்கூடிய பண்பாகும்.

என்ற அடிப்படையில் தலைவன் ஜனநாயகமுறைத் தலைவனாக இருந்தால் போதுமென உணரப்படுகின்றது. இந்த தலைமைத்துவ இயல்பில் கடுமையான முறையால் தலைவன் அணுகுவதைவிட நல்ல முறையில் அணுகுவது கூடிய விளைவைப் பெற்றுத்தருமென உணரப்பட்டுள்ளது.

டக்ளஸ் மைக்கிறகரின் தலைமைத்துவ இயல்பிலிருந்தும் தோன்றியதே நேர்க்கணிய தலைமைத்துவமும் எதிர்க்கணிய தலைமைத்துவமும் ஆகும்.

நேர்க்கணிய தலைமைத்துவம் தனது உதவியாளர்களின் மீது செல்வாக்குச் செலுத்துகின்ற தன்மை கொண்டதாகும். இதன்படி பரிசு வழங்கல், ஊக்கிகளை வழங்கல் ஏனைய நலன்களை வழங்குதல் போன்றவற்றால் ஊழியர்களைத் தட்டிக்கொடுத்து வேலை வாங்கும் பண்பை இது கொண்டிருக்கும். மாறாக எதிர்க்கணிய தலைமைத்துவம் என்பது அதிகாரத்தைப் பயன்படுத்தியோ அல்லது பயப்படுத்தியோ வேலை வாங்கும் பண்பாகும். இதன் நோக்கமெல்லாம் உதவியாளர்கள் மூலம் நிறுவனத்தின் இலக்கை அடைவதாகும். இதனைக் கடுமையான முறையில் அணுகுதல் எனக் கொள்வர். இதன்படி தண்டனைகள், அபராதங்கள், பதவிக்குறைப்பு போன்றன உதவியாளர்களுக்கு வழங்கப்படலாம் எனபதால் இதனை எதிர்க்கணிய தலைமைத்துவம் என்பர். பொதுவாக ஊழியர்கள் X கொள்கைக்குரிய பண்புகளைக் கொண்டிருத்தல் எதிர்க்கணிய தலைமைத்துவம் வழங்கும் Y கொள்கைக்கிணங்க ஊழியர்களின் பண்பு இருத்தல் நேர்க்கணிய தலைமைத்துவமும் பாவிக்க வேண்டியேற்படும்.

## ASHRIDGE MANAGEMENT

இக்கல்லூரி இங்கிலாந்திலுள்ள கைத்தொழில் நிறுவனங்களில் கடைப்பிடிக்கப்படும் தலைமைத்துவ இயல்புகளை ஆய்வு செய்தது. இதன் ஆய்வில் இங்கிலாந்தில் காணப்பட்ட நிறுவனங்களில் நான்கு தலைமைத்துவ இயல்புகள் அவதானிக்க முடிந்தது.

1. பணிக்கும் இயல்பு (Tells Style)
2. திணிக்கும் இயல்பு (Sells Style)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கலந்தாலோசிக்கும் இயல்பு (Consultative Style)
4. இணையும் இயல்பு (Participative Style)

இதில் முதலிரண்டும் அதிகார மயப்பட்ட தலைமைத்துவத்தையும் பின்னைய இரண்டும் ஜனநாயகத் தலைமைத்துவத்தையும் குறிப்பதாக அமையும்.

பணிக்கும் இயல்பில் தலைவன் தானே தீர்மானம் எடுத்து அதனை நடைமுறைப்படுத்துமாறு உதவியாளருக்கு கட்டளை பிறப்பிப்பான். ஆனால் திணிக்கும் இயல்பில் தலைவன் தீர்மானத்தை எடுத்த பின் அதிலுள்ள சந்தேகங்களைக் கேட்கும்படி அனுமதிப்பான். இருந்தபோதும் தீர்மானத்தில் மாற்றம் இருக்காது. அதை ஏற்பது ஊழியரின் கடமையாகும். அதே நேரம் கலந்துரையாடும் இயல்பில் ஊழியர்களிடம் ஆலோசனை பெற்ற பின்பே தீர்மானம் எடுக்கப்படும். இணையும் இயல்பில் தலைவன் ஊழியர்களில் ஒருவனாக இணைந்து தீர்மானம் எடுப்பதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் பங்குகொள்வான். இதனையே குழுத்தன்னியக்கம் எனக் கொள்வர்.

## HUNERYAGER & HECKMAN

இந்த இருவரும் தலைமைத்துவம் இடம்பெறும் பல்வேறு இயல்புகளை ஆய்வு செய்தனர். இவர்களின் கருத்துப்படி நிறுவனங்களில் நான்கு **வகையான** தலைமைத்துவம் காணப்பட முடியும்.

1. சர்வதிகார தலைமைத்துவம்) (Dictatorial)
2. எதேச்சாதிகார தலைமைத்துவம் (Autocratic)
3. ஜனநாயகத் தலைமைத்துவம் (Democratic)
4. கட்டுப்பாடற்ற தலைமைத்துவம் (Laissez Faire)

இவற்றில் சர்வதிகார தலைமைத்துவம் தலைவன் முழுமையான அதிகாரங்களை வைத்துக் கொண்டு ஊழியர்களை அடிமை போல் நடாத்த முற்படுவதாகும். இங்கு தலைவன் கட்டளையை நிறைவேற்றும் பொறுப்பு ஊழியருக்கு இருக்கும். ஆனால் எதேச்சதிகாரத் தலைமைத்துவமோ தலைவன் தீர்மானங்களை எடுத்து சந்தேகங்களை கேட்டுத் தெளிந்து கொள்வதற்குமான அதிகாரத்தை வழங்கியிருப்பான். ஜனநாயகத் தலைமைத்துவத்தில் உதவியாளர்களிடம் ஆலோசனை பெற்றுக் கொண்ட பின்பே தீர்மானங்களை எடுப்பான். மாறாக, கட்டுப்பாடற்ற தலைமைத்துவமோ பெருமளவான சுதந்திரத்தை தொழிலாளருக்கு வழங்க முன்வருவதாகும்.

தலைவன் கட்டுப்பாடுகளைக் கொண்டிருக்கமாட்டான். பெற்றோர் முறை போல் ஊழியருக்கு உதவுவது, வழிகாட்டுவது, பாதுகாப்பளிப்பது, மகிழ்ச்சியாக இருக்க வைப்பது என்பது இத்தலைமைத்துவப் பண்பில் காணப்படும். மகிழ்ச்சியான ஊழியர் கடுமையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பார் என்ற கோட்பாட்டிற்கேற்ப கட்டுப்பாடற்ற தலைமைத்துவத்தில் ஊழியர் சுதந்திரமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க அனுமதிக்கப்படுவார்.

**RENSIS LIKERT**

இவர் நிறுவனங்கள் கடைப்பிடிக்கும் தலைமைத்துவ அடிப்படையாகக் கொண்டு நான்கு வகைப்பட்ட தலைமைத்துவ இயல்புகளைக் காட்டினார்.

1. சுரண்டல் தலைமைத்துவம் (Exploitative)
2. இரங்கல் தலைமைத்துவம் (Benevolent)
3. கலந்துரையாடும் இயல்பு (Consultative)
4. பங்குபற்றும் இயல்பு (Pertivipative)


இதில் சுரண்டல் தலைமைத்துவம் என்பது அதிகாரத்துடன் கூடிய தலைமைத்துவத்தினைக் காட்டுவதாகும். நிறுவனத்தின் நோக்கமான உச்ச இலாபம் அடைவதனை நோக்கமாகக் கொண்டு ஊழியர்களைச் சுரண்டும் தன்மை கொண்டதெனக் கொள்ளப்படும். ஆனால் இரங்கல் தலைமைத்துவமோ தான் எடுத்த தீர்மானங்களை ஊழியர்களுக்கு விளக்கச் செய்து அதனை ஏற்றுக்கொள்ள வைக்கும் தன்மை கொண்டது. அதேநேரம் கலந்துரையாடும் இயல்போ ஊழியர்கள் ஆலோசனை பெற்ற பின்பே தீர்மானம் எடுக்கும் தன்மை கொண்டதாகும். மாறாக, பங்குபற்றும் தலைமைத்துவமோ ஊழியர்களுடன் இணைந்து தொழிற்படும் இயல்பு கொண்டதாகும். இத்தலைமைத்துவமே பங்குபற்றும் முகாமை என்ற பிரபலமான முகாமைக்கு வகை செய்தது. ஊழியர்களின் தன்னிச்சையான ஒத்துழைப்பைப் பெறவும் அவர்களின் திருப்தியை உச்சப்படுத்தவும் பங்குபற்றும் தலைமைத்துவம் வகைசெய்கின்றது. இங்கு தலைவன் ஊழியர்களின் சுதந்திரத்தை உச்சப்படுத்தி தனது அதிகாரத்தைப் பெருமளவு குறைத்துக் கொள்வான்.

## 1.5 தொடர்ச்சித் தலைமைத்துவ இயல்பு - CONTINNUAM OF LEADERSHIP

இது ரனென் போம் (Tannenbaum) என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். ஒரு தலைவன் தான் வைத்துக்கொள்ள விரும்பும் அதிகாரத்தின் அளவிற்கும் உதவியாளர்களுக்கு வழங்க விரும்பும் சுதந்திரத்திற்கும் இடையில் தலைமைத்துவத்தின் இயல்பு எவ்வாறு வேறுபடும் என்பது பற்றிக் குறிப்பிடுவதே தொடர்ச்சித் தலைமைத்துவ இயல்பாகும். இதில் ஏழு வகையான இயல்புகளை அவதானிக்க முடியும் எனக் கூறப்பட்டுள்ளது. இதனைப் பின்வரும் வரைபடம் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மேற்காட்டிய வரைபடத்தின்படி தலைவன் கொண்டிருக்கும் அதிகாரம் குறைவடைய உதவியாளர்கள் கொண்டிருக்கும் அதிகாரம் உயர்வடைந்து செல்வதைக் காட்டுகின்றது.

1. இக்கட்டத்தின் தலைவன் தீர்மானங்களை எடுத்து உதவியாளருக்கு அறிவித்துவிடும் இயல்பைக் கொண்டிருப்பார்.
2. இக்கட்டத்தில் தலைவன் தீர்மானங்களை எடுத்து உதவியாளரை ஏற்றுக் கொள்ள வைப்பார்.
3. இக்கட்டத்தில் தலைவன் தனது கருத்துக்களை முன்வைத்து வினாக்களை எதிர்பார்ப்பார்.
4. இக்கட்டத்தில் தற்காலிக தீர்மானம் ஒன்றை தலைவன் எடுத்து மாற்றங்களை எதிர்பார்ப்பான்.
5. இக்கட்டத்தில் தலைவன் தனது அதிகாரங்களை வெகுவாகக் குறைத்து உதவியாளர் சுதந்திரத்தைக் கூட்டிக்கொள்வார். இதற்கமைய உதவியாளர் ஆலோசனைகளைப் பெற்ற பின்பே தீர்மானம் எடுக்கப்படும்.
6. இக்கட்டத்தில் தலைவன் எல்லைகளை வரையறுத்து அதற்குள் தீர்மானங்களை எடுக்கும்படி உதவியாளர்களைக் கேட்டார்.
7. இக்கட்டத்தில் ஊழியர்கள் பெருமளவு சுதந்திரத்தை அனுபவிப்பர். இங்கு ஊழியர்களே தேவையான தீர்மானங்களை எடுத்து நடைமுறைப்படுத்தும் அதிகாரத்தை வைத்திருப்பார்.


மேற்காட்டிய தொடர்புத் தலைமைத்துவ இயல்பில் முதல் நான்கு கட்டங்களும் அதிகார மயப்படுத்தப்பட்ட தலைமைத்துவத்தையும் பின்னைய மூன்றும் ஜனநாயக மயப்பட்ட தலைமைத்துவத்தையும் கொண்டிருப்பதைக் கொள்ளமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.5 MANAGERIAL GRID - BLAKE AND MOUTON

தலைமைத்துவம் ஊழியர் நலனின் மீதும் நிறுவனத்தின் நலனின் மீதும் செலுத்துகின்ற அக்கறையை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டதே முகாமைத்துவ வலைப்பின்னலாகும். இத்தகைய தலைவன் பின்பற்றக்கூடிய தலைமைத்துவ இயல்பானது 81 பண்புகளைக் கொண்டிருக்கமுடியும் எனக்காட்டப்பட்டுள்ளது. இந்த முகாமைத்துவ வலைப்பின்னலிலே X அச்சில் உற்பத்தி நோக்கியது என்ற பண்பும் Y அச்சில் மக்கள் நோக்கியது என்ற பண்பும் காட்டப்பட்டுள்ளது. இதனைப் பின்வரும் படம் காட்டுகின்றது.




மேற்காட்டிய படத்தில் ஒவ்வொரு அச்சிலும் 9 பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக 9 x 9 = 81 தலைமைத்துவ இயல்புகள் இங்கு தோன்றும் சாத்தியம் காட்டப்பட்டுள்ளது. அதில் ஐந்து தூய இயல்புகள் மட்டுமே முக்கியமானவையாக காட்டப்படும். இதனால் வரைபடத்தில்,

1. 9, 1 எனும் புள்ளியிலுள்ள இயல்பு அதிகார மயப்பட்ட தலைமைத்துவத்தைக் காட்டும் இணைப்பு தலைவன் திட்டமிட்டவாறு உற்பத்தியை நிறைவேற்றிக் கொடுக்கும் பொறுப்பு ஊழியரைச் சாரும். ஊழியர் நலனைவிட நிறுவனத்தின் நலனே முக்கியம் என்ற அடிப்படையில் தலைவன் கட்டளையை நிறைவேற்றும் பொறுப்பு ஊழியரைச் சாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. 1, 9 எனும் புள்ளியிலுள்ள இயல்பு ஊழியர் நலனில் அதிக அக்கறை காட்டுவதாகும். இதில் மனித உறவுகள் என்பதற்கே முக்கிய இடம் கொடுக்கப்படும். மகிழ்ச்சியான ஊழியர் கடுமையாக உழைப்பார் என்ற கொள்கைக்கிணங்க இங்கு தலைவன் ஊழியருக்கு வசதிகளை வழங்கி உற்பத்தியை பெரிதும் வலியுறுத்தாமல் விட முடியும்.
3. 1, 1 எனும் புள்ளியிலுள்ள இயல்பில் ஊழியரிலும் சரி உற்பத்தியிலும் சரி அதிக அக்கறை காட்டாத தலைமைத்துவம் இருப்பதைக் காட்டும். இவர்கள் ஊழியர் சுதந்திரமாக விடப்படுவது நன்கு வேலை செய்ய வழிவகுக்கும் என நம்பப்படுகின்றது. இதன் காரணமாகவே கட்டுப்பாடற்ற தலைமைத்துவம் இங்கு உள்ளது.
4. 9, 9 எனும் புள்ளியிலுள்ள இயல்பில் ஊழியர் மீதும் உச்ச அக்கறை செலுத்தப்படும். இங்கு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்ற விருப்பம் எவ்வாறு தலைவனிடம் உள்ளதோ அதேபோல் ஊழியர் நலனைப் பேணுவதிலும் அக்கறை இருக்கும்.
5. 5, 3 புள்ளியிலுள்ள இயல்பில் ஊழியர் திருப்தியடையும் வகையில் ஒழுங்குணர்வை பராமரித்து இயலுமான உற்பத்தியைப் பெறுவதற்கும் இக்கட்டத்தில் ஊழியர் நலன் மீதும் உற்பத்தி அதிகரிப்பின் மீதும் சம அக்கறை காட்டப்படும்.


மேற்கூறிய முகாமைத்துவ வலைப்பின்னலின் அடிப்படையிலேயே பின்னர் ஒகியோ பல்கலைக்கழகம், மெக்சிக்கோ பல்கலைக்கழகம் ஆகியன தலைமைத்துவ இயல்புகளை ஆய்வுசெய்து அடிப்படையில் இலக்கை நோக்கிய தலைமைத்துவம், ஆள் நோக்கிய தலைமைத்துவம் என வகுக்கப்பட்டு காட்டப்பட்டுள்ளன. இதில் இலக்கு நோக்கியதில் நிறுவனத்தின் நலனான உற்பத்தி அதிகரிப்பும் ஆள் நோக்கியதில் ஊழியர் நலனும் வலியுறுத்தப்படுகின்றன.

## 1.6 நிலைமைக்கேற்ற தலைமைத்துவம் / வாழ்க்கை வட்டத் தலைமைத்துவம் Sitcsational Leadership / Life cycle leadership

**Hersey Blanchad's** ஆகியோரால் அறிமுகப்படுத்தப்பட்ட நடத்தைக் கோட்பாடு இதுவாகும். முகாமையாளரின் தலைமைத்துவ இயல்பைத் தீர்மானிக்கின்ற முக்கிய காரணியாக உதவியாளர்களது முதிர்ச்சி நிலை காணப்படும். வேலைக்கு பொருத்தமான பயிற்சி அனுபவம், ஆற்றல், நிறைவேற்றும் ஆர்வம், சாதனை உணர்வு, பொறுப்புகளை ஏற்கும் விருப்பம் என உதவியாளர் முதிர்ச்சி அமையும். இம் முதிர்ச்சியைப் பொறுத்தே தலைமைத்துவ இயல்பு தீர்மானிக்கப்படும். இதனைப் பின்வரும் படம் காட்டுகின்றது. மணி (Bell) வடிவத்திலான கோடு ஊழியர் முதிர்ச்சிக்கும் ஊழியர் உறவுக்குமான தொடர்பைக் காட்டுகின்றது. இதிலிருந்து நான்கு பெட்டிகளும் வேறுபட்ட தலைமைத்துவ அணுகுமுறைகளைக் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆரம்பக்கட்டத்தில் அதாவது உதவியாளர் முதன்முதலாக நிறுவனத்தில் வேலைக்கு சேரும் போது முகாமையாளர் அதிகளவில் வேலையை மையமாகக் கொண்டு வழிநடத்துவதே பொருத்தமானதாக இருக்கும். எனவே இங்கு வேலையை மையமாகக் கொண்டு வேலைகள் தொடர்பாக அறிவுறுத்துவதுடன் ஊழியர்களுடன் குறைந்த உறவுகளையே கொண்டிருப்பர்.

இரண்டாவது கட்டத்தில் உதவியாளர் தமது வேலைகளைக் கற்றறியத் தொடங்கினாலும் அவர்கள் இன்னும் முழுப்பொறுப்பையும் ஏற்க சம்மதமாக இருக்கமாட்டார்கள். இதனால் முகாமையாளர் அதிகளவில் வேலையை மையமாகக் கொண்டு வழிநடத்துவார்கள். அத்துடன் இக்கட்டத்தில் உதவியாளருடன் பழக்கமானவராக ஆகுவதாலும் அவர்களை உற்சாகப்படுத்தி விரும்புவதாலும் தொடர்புகளை அதிகளவில் பேணுவார்.

மூன்றாவது கட்டத்தில் உதவியாளர்களின் ஆற்றல் சாதனைக்கான விருப்பப் பொறுப்புக்களை ஏற்பதற்கான சம்மதம் என்பன அதிகரித்ததால் இங்கு முகாமையாளர்களின் வழிநடத்தல் அதிகளவில் தேவைப்படாது. எனினும் உதவியாளர்களின் மனவுறுதியை அதிகரிக்கக்கூடிய வகையில் அவர்களுடன் அதிக தொடர்புகளைப் பேணுவார்.

நான்காவது கட்டத்தில் ஊழியர்களின் உறவிலும் உற்பத்தி அக்கறையிலும் குறைவு காணப்படும். இக்கட்டத்தில் ஊழியர் முதிர்ச்சி பெற்று விளங்குவதனால் அவர்களைத் தாமாகவே முயற்சி செய்ய அனுமதிக்கும் நிலை உருவாகின்றது. இங்கு தலைவன் நிர்வாகக் கடமையைப் புரிபவராகவும் சுய ஊக்குவிப்பு, சுயநெறிப்படுத்தல் ஆகியவற்றை ஏற்படுத்தி ஊழியர்களுக்கு வழிகாட்டுபவராகவும் தலைவர் இருப்பார்.

**க.தேவராஜா**
**தலைவர்**
**வணிகத்துறை**
**யாழ்ப்பணப் பல்கலைக்கழகம்**

Digitized by Noolaham Foundation.
